# யாழ்நாதம்

இதழ் 22

2016 / 2017



வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்நாதம் வெளியீட்டு விழாவின் சிறப்பு விருந்தினர்
திரு. சமரபாகு உதயகுமார் உரையாற்றும் நிகழ்வு.



திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் (பழைய மாணவி) மடிக் கணனி அன்பளிப்பு
வழங்கும் நிகழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."

"It ought to be beautiful, I live here."

# யாழ்நாதம்

இதழ் 22 2016, 2017

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கல்லூரி கீதம் | 2 |
| 2. | மலர் ஆசிரியரின் சிந்தனைத் துளிகள் | 3 |
| 3. | மன்றத் தலைவியின் வாழ்த்து | 8 |
| 4. | வாசிப்பும் இன்றைய சமூகமும் | 11 |
| 5. | வீணையைப் பேச வைத்த வீணை பாலச்சந்தர் | 18 |
| 6. | தாயைப் போற்றுவோம் - தெய்வம் மகிழும் | 21 |
| 7. | கலியுகத்தில் நாம் | 26 |
| 8. | இன்னும் படிக்காத பாடங்கள் | 30 |
| 9. | பட்டணங் கண்ட பட்டிக்காட்டான் | 31 |
| 10. | தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை | 32 |
| 11. | வாழ்க்கைக்கு வேண்டியவை | 33 |
| 12. | உங்களுக்குத் தெரியுமா? | 36 |
| 13. | நாம் அறிந்திருக்க வேண்டியவை - விழாக்கள் | 38 |
| 14. | அரச மரத்தின் மகிமை | 43 |
| 15. | Nursery Rhymes - their origin and allusions | 46 |
| 16. | Where Have All The Transistors Gone? | 50 |
| 17. | கலைமகள் கைப்பொருள் | 52 |
| 18. | சொரூபியின் சொரூபம் | 54 |
| 19. | சொல்லின் செல்வி எங்கள் தோழி | 57 |
| 20. | யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு இருபத்தியிரண்டாவது ஆண்டு அறிக்கை 2015 | 59 |
| 21. | அஞ்சலிகள் | 63 |
| 22. | விளம்பரங்கள் | 66 |
| 21. | நன்றி சொல்ல வேண்டும் | 68 |



வெளியீடு

**யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் இலட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியரின் சிந்தனைத் துளிகள்

"நீயும் நானுமா ?" எழுகின்றது வினா ஒன்று. யார் இந்த நீ "? ஆம்! அவள் தான் என் கல்லூரித் தாய். அவளை என்னைக் கல்வித்தளத்தில் பாதம் பதிக்க வைத்த தாய் என்பேனா? இல்லை என் அருமைத்தோழி என்பேனா? எது எப்படியிருப்பினும் அன்றும், இன்றும் அவள் எனக்கினியவள், எளியவள், பெருமைக்குரியவள், தெய்வீகமானவள்.

1940களில் யாழ் இந்துக் கல்லூரியில் எனது ஆண்டு 6 கல்வி ஆரம்பமானது. யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவி நான் என்று இன்று நான் கூறினால், எவருமே அதனை ஏற்கத்தயாராய் இல்லை. யாழ் / இந்து. அது ஆண்கள் பாடசாலையல்லவா? என்ற வினாதான் முன்னே கொக்கி போட்டு நிற்கும். ஆனால் எனது கூற்றை நம்பித்தான் ஆக வேண்டும். ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். காரணம், யாழ்/இந்து ஆரம்பத்தில் பெண்பிள்ளைகளையும் பெருந்தன்மையுடன் ஏற்று கல்வி அளித்தது. அதில் தான் எமக்கு எத்தனை பெருமிதம்!

அன்பான அதிபர் திரு C.குமாரசுவாமி, அங்கு பாடசாலை வளவின் மத்தியில் அமைந்த பிள்ளையார் கோயில், "அன்னம்மா ரீச்சர்", அடி போட்டு, ஆங்கிலம் கற்பித்த கொண்டல் மரத்தடி வகுப்பு, கருணையுடன் எமக்கு கல்வி தந்த கருணாதேவி ரீச்சர், நாம் காலாற ஓடித்திரிந்த யாழ்/ இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானம், ஒவ்வொரு பாடமும் முடிய, படியேறி மணி அடிக்கும் ராமசாமி "அங்கிள்" அப்பப்பா! வாழ்வில் மறக்க முடியுமா இவற்றை!

இந்து மகளிர் கல்லூரி ஒன்று ஸ்தாபித்தால் என்ன? என்றதோர் உயர்வான நல்ல நோக்கம் பாடசாலை நிர்வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையினரிடையே தோன்றவே, தற்காலிகமாக கொட்டகைகளை போட்டு வகுப்புக்களாகப் பிரித்து யாழ் / இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தின் ஒரு கரையோரமாக பெண்களுக்கென தனிப் பாடசாலையாக, எமக்கெனவொரு கல்லூரி அமைக்கப் பெற்றோம். அதுவும் சில காலம்தான். பின்னர், இப்போது இந்து மகளிர் கல்லூரி அமைந்திருக்கும் "நடுத்தோட்டம்" என்னும் வளவில் முன் அமைந்த திரு.பொன்னுச்சாமி என்பவரது நாற்சார வீட்டில், எமது இந்து மகளிர் கல்லூரி இயங்கலாயிற்று. அப்போது எங்கள் கல்லூரி அதிபராக இருந்தவர் செல்வி.காயத்திரி பொன்னுத்துரை அவர்கள்.

அவர் சிறிய தோற்றம் உடையவராகக் காணப்பட்டபோதும் "கடுகு சிறிது காரம் பெரிது" என்ற வார்த்தைக்கிணங்க மிகவும் ஆளுமை, ஆற்றல், நிதானம், கண்டிப்பு, அதே நேரம் புரிந்துணர்வு கொண்ட அதிபராக விளங்கினார். தொடர்ந்து திருமதி சிற்றம்பலம் அவர்கள் எமது அதிபராக கடமை ஏற்றார். இவர் முன்னையவர்க்கு சற்று எதிர் மாறாகக் காணப்பட்டார். மிகுந்த அமைதி, மென்மை ஆனால் ஆற்றல் கொண்ட ஒரு சாதுவான பெண்மணியாகக் காட்சி தந்தார். இவர் இந்து மகளிர் கல்லூரியில் ஒரு தென்றல்.

அடுத்த கட்டமாக திரு.சிவகுருநாதர், திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் தம்பதிகள் மனமுவந்து தங்களுக்குரிய "நடுத் தோட்டத்தில்" உள்ள காணியை எமது கல்லூரிக்கு அன்பளிப்பாகத்தரவே, அங்கு எமது கல்லூரி மிகப் பெரிய அளவில் பல கட்டங்களுடன் புதியதோர் பொலிவைப் பெற்று இந்து மகளிர் கல்லூரி எனத் துலங்கலாயிற்று.

இந்தக் காணியுள் நாம் குடி புகுமுன்னமே அங்கு ஏற்கனவே அமைந்திருந்த ஒரு பிள்ளையார் கோயில் எமை வரவேற்றது. அங்கு எழுந்தருளியுள்ள விக்னேஸ்வரப் பெருமானே எங்கள் இந்து மகளிர் கல்லூரியை அன்றும் இன்றும் கட்டிக்காத்து வருகின்றார் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நாம் சந்தித்த அதிபர்கள் மிகப் பலர். திருமதி.மொட்டுவாணி என்ற ஓர் அமெரிக்கப் பெண்மணி. இவர் அமெரிக்க நங்கையாக இருந்தாலும் எங்கள் பாணியில் புடவை கட்டி இந்து கலாச்சாரம் மிளிர, மிக்க மிடுக்குடன் எங்கள் கல்லூரி உயர பலபடிக் கற்களாக அமைந்தவர் என்றால் மிகையாகாது.

முதல் வேலையாக எங்கள் கல்லூரி முன்றலில் பெரியதோர் நிரந்தர சிமேந்து மேடை அமைத்து அன்றாட சமய இலக்கிய கலை நிகழ்ச்சிகளை மாணவர்களைக்கொண்டு அதில் நடாத்திய பெருமை இப் பெண்மணியையே சாரும். இந்த அழகான மேடையில் தினமும் நான் பிராத்தனைக் கீதங்கள் பாடியதுண்டு. நாடக இசைப் போட்டியில் பாடிப் பரிசில்களைத் தட்டியதுண்டு. நாடகங்கள் நடித்ததுமுண்டு. நவராத்திரி நாட்களிலே தேவி பூசையின்போது கும்மி கோலாட்டம் அடித்து மகிழ்ந்ததுமுண்டு.

தொடர்ந்து இந்தியாவைச் சேர்ந்த தெலுங்குப் பெண்மணி திருமதி.சரோஜினிராவ்: எங்களைக் கவர்ந்த எமது கல்லூரி அதிபராக அமைந்தார். அவரது கம்பீரமான தோற்றமும், மிடுக்கான நடையும், உரத்த குரலும், கண்களிலே விவேகமும், எங்கள் எல்லோரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. இந்த நல்ல அதிபரது கால கட்டத்திலே எமது பாடசாலையில் ஒரு "காணிவேல்" (CARNIVAL) நடாத்தி நிறையப் பணம் கல்லூரி நிதிக்குக் கிடைத்ததால், கல்லூரி மேலும் மேலும் பல கட்டடங்கள் பிரமாண்டமான சுற்று மதில், ஆய்வு கூடங்கள், நூலகம் என வளரலாயிற்று.

இந்த நிறைவான வளமான கால கட்டத்திலே, நான் எனது உயர் கல்வியை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடர தமிழ்நாடு சென்று விட்டேன். தொடர்ந்து திருமதி. விமலா ஆறுமுகம், செல்வி பத்மா இராமநாதன் கல்லூரியின் அதிபர்களாக கடமை ஏற்று இந்து மகளிர் கல்லூரியை வனப்புடன் வளமானதாய் யாழ் நகரிலே கொடி கட்டிப் பறக்க வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கல்லூரியின் ஆசீர்வாதத்துடன் நான் பொருளாதாரப் பட்டத்தாரியாகி பின்னர் இந்து நாகரிகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றேன். 22 வருடங்கள் ஆசிரியராகவும் 11 வருடங்கள் அதிபர் ஆகவும் கடமையாற்றினேன். இவ்வேளையில் என்னை இக் கல்லூரியில் புடமிட்டுப் பொன்னாக்கிய என் நெஞ்சம் நிறைந்த ஆசிரியப் பெருந்தகைகளைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லுதல் எனது தலையாய கடமையாகும்.

எமக்கு புவியியல் உடற்பயிற்சி ஆகிய பாடங்களைக் கற்றுத்தந்த எம்மை நெறிப்படுத்திய திருமதி. லீலா நாகரெட்ணம் (செல்வி. லீலா பொன்னையா) எமக்கு ஆங்கில இலக்கியம் போதித்த செல்வி. விஜயலட்சுமி பதி. இவர் ஆங்கில இலக்கிய கதைகளை நடித்தே காட்டி கதை கதையாய் கூறி எம்மை ஐரோப்பிய நாடுகளுக்கே அழைத்துச் சென்று விடுவார். அவர் விளக்கிக் கூறிய "Merchant of venice" "Macbeth" "Romeo And Juliet" "Anthony And Cleopatra" "Julius Caeser" "Mid Summer Night Dream" "Cymbalyne" இந்த நாடகங்களில் வரும் கதா பாத்திரங்களை அந்த மாதிரி தன் விளக்கத்தின் மூலம் எம் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்தி அசத்தியவர் செல்வி. பதி.

அடுத்து எமக்கு. அழகு தமிழ் கற்பித்த எங்கள் அன்பிற்குரிய ஆசிரியை செல்வி. சிவபாக்கியம் கனகசபை. கணித பாடத்தை கல கலப்பாக எமக்குப் புகட்டித்தந்த செல்வி தம்பு அவர்கள். மேலும் ஆங்கிலத்தை அட்டகாசமாக்கக் கற்றுத்தந்த செல்வி ஐயர், அவர்கள், இவர்கள் எல்லாம் எமது மாணவப் பருவ விண்ணிலே ஜொலித்த நட்சத்திரங்கள் அல்லவா!

நட்பின் இலக்கணமாய் பசுமை நிறைந்த பள்ளிக்கூட நாட்களை அடிக்கடி என் மனதில் மீட்ட என்னைச் சுற்றி இங்கு கொழும்பில் நான் காணும் என் பாடசாலைத் தோழிகளையும் நான் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். எத்தனை தோழிகள்! அத்தனை நட்பு! அவர்கள் எல்லாம் உலகளாவப் பரந்து வாழ்கின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும், இங்கு நான் அடிக்கடி சந்தித்து மனம் விட்டு அளவளாவும் என் உயிர்த்தோழிகள் செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி திலகா விஜயரட்ணம், திருமதி நீலாயதாட்சி பினாகபாணி அன்புடன் நான் அக்கா என்றழைக்கும் வள்ளி அக்கா திருமதி கமலா இராசரத்தினம், திருமதி தயாநிதி செல்வநாயகம், திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம், திருமதி புவனேஸ்வரி இவர்கள் என் நட்புப் பூங்காவில் தினமும் அன்றலர்ந்த மலர்களாய் இனிய மணம் பரப்பி நிற்கும் வண்ண மலர்கள் என்றால் அது நிஜம்

*கல்வி தந்து சமுதாயத்தில் என்னையும்*
*ஒரு கற்றவளாக இனங்காட்டிய*
*என் உயிரினுமினிய கல்லூரியே!*
*என் நெஞ்சை விட்டகலா*
*இந்து மகளிர் கல்லூரிச் செல்வமே!*
*பூமி உள்ள வரை நீ பூத்துக்குலுங்கிட*
*சாமி உனக்கருள வேண்டி நிற்கிறேன்*
*பாதையும் திறந்தாயிற்று*
*வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே!*

என்றும் உன் அன்பகலா மாணவி
**கலாபூஷணம் திருமதி இராஜெஸ்வரி ஜெகானந்தகுரு**
முன்னாள் அதிபர், யாழ் /நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயம்
பழைய மாணவி யா/இந்துமகளிர்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத் தலைவியின் வாழ்த்து

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளை வழமை போல யாழ்நாதம் சஞ்சிகையை இவ்வருடமும் வெளிக் கொண்டு வருகின்றது. 22 வருடங்களாக ஆண்டு தோறும் வெளி வருகின்ற இந்த இதழின் இதழ் ஆசிரியைகளான திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி விமலா மணிவாசகர், திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆகியோரின் அயராத உழைப்பில் வெளிவரும் இவ்விதழினை வெளியிடுவதற்கு ஆக்கங்களை தந்து தவி ஊக்கமூட்டிய சங்க உறுப்பினர்கள் ஆக்கங்கள் வழங்கியோர் அனைவரையும் அன்புடன் நினைவு கூருவதுடன் இவ்விதழ் தொடர்ந்தும் சிறப்பாக வெளிவருதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் எமது பழைய மாணவர் சங்கங்கள் அரும்பணியாற்றி வருகின்றமையின் ஓர் அம்சமாக புதிய மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை நிறுவும் பணியினை மேற்கொண்டு வருகின்றோம். இப்பணியிலே கொழும்புக்கிளை, அவுஸ்ரேலியக்கிளை, இலண்டன்கிளை, கனடாக்கிளை, யாழ்பாணக்கிளை எல்லோருமே இணைந்து செயற்படுகின்றோம். தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இப்பணி விரைவில் நிறைவு செய்யப்படும். எமது பழைய மாணவர் சங்க கிளைகள் பல்வேறு பௌதீக வளங்களை வழங்கி வரும் அதேவேளை கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கின்றது.

பாரம்பரியம் மிக்க எமது கல்லூரி கடந்த கால்களில் சிறந்த அறுவடையைத் தந்தது போலவே தொடர்ந்தும் சாதனை புரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும். கல்வி, விளையாட்டு, கலை, இலக்கியத் துறைகள் என சகல துறைகளிலும் கல்லூரியை முன்னிலைக்கு கொண்டு வரும் அதிபர், ஆசிரியர்களுக்கும், ஊக்கமுடன் செயற்பட்டு கல்லூரியின் புகழினை ஓங்கச் செய்யும் மாணவிகளுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும். மென்மேலும் கல்வியில் முன்னேற்றம் கண்டு முதல்நிலைப் பெறுபேறுகளை ஈட்டும் கல்லூரியாக மிளிர்வதற்கு இறையாசியை வேண்டுகிறேன்.

அடுத்ததாக சஞ்சிகைக்கு பழைய மாணவிகள் அனைவரும் சிறந்த ஆக்கங்களை எழுதி சங்கத்தின் இதழைத் தொடர்ந்தும் அலங்கரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி அபிராமி கைலாசபிள்ளை**
மன்றத்தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பும் இன்றைய சமூகமும்

இன்றைய காலகட்டத்தில் ஒரு மனிதனின் வாசிப்பு வீச்சு குறைந்து போகின்ற ஒன்றாகவே பார்க்க முடிகின்றது. பொதுவாக ஈழதேசத்தில் குறைந்து போன ஒன்றாகவே வாசிப்புப் பழக்கம் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்திய தொழிநுட்ப வளர்ச்சி எத்தனையோ மடங்கு முன்னேறிக்கொண்டிருக்கிறது. அங்கே இணைய நூலக வசதிகள் பல அதிகரித்து காணப்படுகின்றன. தொலைக்காட்சி தொடர்பான பொழுதுபோக்குகள் அதிகமாகி விட்டன. ஆனாலும், அங்கே அச்சு ஊடகங்கள் மீதான வாசிப்புப் பழக்கங்களின் அளவு குறைந்து விடவில்லை.

சின்ன வயது முதல் பெரிய வயதுடையவர்கள் வரை எல்லோரும் நிறைய வாசிக்கின்றார்கள். அதற்கான நூல்களும் அதிகளவில் வெளியிடப்படுகின்றன. பாடசாலை நிகழ்வுகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வயதில் சிறியவர்கள் கருத்தாழம் கருதி வாதிடும் திறன் காணும் போது நாமெல்லாம் இன்னும் பின்னோக்கியே வாழ்கின்றோம் என்பதை உணரமுடிகின்றது. அப்படி அவர்கள் பேச்சாற்றல் மிக்கவர்களாகவும், அவர்களின் சிந்தனைகள் முன்மாதிரியாகவும் அமைந்துவிடுவதற்கு, அவர்களது வாசிப்புப் பழக்கமே முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றன எனலாம்.

எங்களில் பலர், பொதுவாக அலுவலகங்கள், பாடசாலைகளில் தொழில் புரிவோர் நாளாந்த பத்திரிகைகளில் வருகின்ற தலையங்கத்தை மட்டும் வாசிக்கின்றார்கள். அதனுள்ளே சென்று ஆழமாக வாசிப்பது கிடையாது. தலையங்கத்தை மட்டும் வாசித்து விட்டு இதுதான் நடந்திருக்கிறது என்று வாதிடுகிறார்கள். உண்மையில் அப்படியொரு முடிவுக்கு வருவது தவறானதாகும். காரணமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நவீன பத்திரிகை யுகத்திலே தலையங்கத்தைக் கவர்ச்சிகரமாகப் பதவு செய்துவிட்டு பந்தி முடிக்கும் தறுவாயிலே தலையங்கத்திற்கு முரணான முறையில் முடித்துவிடுகின்ற உத்தியினையே காணமுடிகின்றது. இதனை இன்றைய படித்த சமூகத்தினரின் அனேகமானோர் அவதானிப்பது கிடையாது. இது மிகவும் வேதனையான ஒரு விடயமாகும்.

வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரண நிலையினை அடைந்து விடுகின்றான் என்றுதான் அன்றிலிருந்து இன்றுவரை கூறி வருகின்றார்கள். நாமும் அதனையே மற்றவர்களிடம் கூறி வருகின்றோம். எமக்கடுத்த சந்ததியும் அதனைத்தான் கூறப் போகின்றது.

"நாளும் பொழுதும் என்னோடு நாவாடிக்கொண்டு இருப்பது மட்டுமல்லாமல், நான் வீழ்ந்துவிடக் கூடாது என்று நினைக்கின்ற நண்பர்கள் புத்தகங்கள்தான்" என்று கவிஞர் றொபேர்ட் கதே கூறியுள்ளார்.

"உன்னிடம் எதையும் எதிர்பார்க்காமல் தன்னை முழுமையாக உனக்கு அர்ப்பணிக்கும் நண்பன் என்றால், அது புத்தகம்தான்" என்று கவிஞர் லாங்ஃபெலோ கூறியுள்ளார்.

"வாசிப்பு ஒருவனை எப்பொழுதும் தயாராக இருப்பவனாக உருவாக்கிவிடுகிறது" என்பது பேரறிஞர் பிரான்சிஸ் பேர்கன் என்பவரின் கூற்றாகும்.

"எதிரிப்படைகளைத் தாக்கி அழித்து பாரிய படையெடுப்பு நிகழ்த்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் நூலகங்களும் நூல்களும் பாதுகாக்கப்பட வேண்டும்" என்று படைவீரர்களுக்குக் கட்டளையிட்டவர்களில் மாவீரன் அலெக்ஸ்சாண்டர், மாவீரன் பொபர் போன்றோர் முதன்மையானவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

எங்களுக்கு முன் வாழ்ந்த அல்லது எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற பலரின் சாதனைக்கு முக்கிய காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது இந்த வாசிப்புப் பழக்கமே ஆகும். பட்டம், பதவி ஒரு மனிதனை உயர்ந்தவனாக்கி விடாது. தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கமே அவனை முழு மனிதனாக்கி விடுகின்றது. இதனால்தான் அவனை மற்றவர்களிடமிருந்து பிரித்து முதன்மையானவனாகப் பார்க்க முடிகின்றது.

காமராஜர், அண்ணாத்துரை, கண்ணதாசன், எம்.ஜி.ஆர், ஏபிரகாம் லிங்கம், நெல்சன் மண்டேலா போன்றோர் இவ்வகையிற் சேர்ந்தவர்களாவர்.

பல பட்டங்கள் பெற்று பதவி நிலையின் உயர்நிலை பிடித்தவர்கள் பலர், பதவிக்காலம் முடிகின்ற போது பல் இழந்த நாய்கள் போல சமூகத்தில் மௌனமாக உலா வருவதையும் காணமுடிகின்றது.

மரணதண்டனை விதிக்கப்பட்டு நஞ்சு தனக்குக் கொடுக்கப்படும் வரை படித்துக் கொண்டிருந்தாரம் கிரேக்க நாட்டு சிந்தனையாளர் சோக்கிரட்டீஸ்.

தூக்குக்கயிற்றினை, தனது கழுத்தில் மாட்டும் வரைக்கும், படித்துக்கொண்டு இருந்திருக்கிறார் லிபிய நாட்டு புரட்சியாளர் உமர் முக்தர்.

இலண்டன் நூலகத்தில் 30 ஆண்டு காலமாக வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருந்த கார்ல் மார்க்ஸ், பிற்காலத்தில் பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தையாக விளங்கினார்.

தான் மறைந்த பின், தன் சடலத்தின் மீது மலர் மாலைகள் வைக்கக்கூடாது புத்தகங்கள் தான் வைக்கப்பட வேண்டும் என நேரு கேட்டிருந்தார்.

புற்றுநோயால் உயிரோடு போராடிக் கொண்டிருந்த போது சிகிச்சைக்காக அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு நாள் மருத்துவர் வந்து "இன்று உங்களுக்கு அறுவைச் சிகிச்சை இருக்கிறது" என்று சொன்ன போது, "நான் வாசித்துக் கொண்டடிருக்கின்ற புத்தகத்தின் சில பக்கங்கள் மிச்சமாக இருப்பதால், அவற்றைப் படித்து முடிக்கும்வரை என் உயிர் காக்கும் இந்த அறுவைச் சிகிச்சையினைத் தள்ளி வையுங்கள்" என்று சொன்னார் அறிஞர் அண்ணாத்துரை.

இவர்களைப் போன்றவர்களைப் பற்றி இன்று வரை நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம் என்றால், அவர்கள் தங்கள் நீண்ட வாசிப்புப் பழக்கத்தின் மூலமாக எதையோ சாதித்து இந்த மக்களுக்கு அதனை விட்டுச் சென்றுள்ளார்கள் என்பதே ஆகும்.

படிப்பதற்கென்று நேரம் ஒதுக்கிப் படிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். எப்போதும் அவர்களின் கைகளிலே சிறந்த நூல்கள் இருந்துகொண்டே இருக்கும். இத்தகையோரும் சிறந்த படிப்பாளிகள் வகையைச் சேர்ந்தவர்களே ஆவர்.

காலையிலும், மாலையிலும், கடும்பகலிலும், நாளும் பொழுதும் நற்பொருள் விளங்கும்படி படிக்கவேண்டும் என்று படிப்பவர்கள் இருக்கின்றார்கள். புத்தகம் படிக்கின்ற நல்ல பழக்கமுள்ளவர்களை, வாசிப்புப் பழக்கமில்லாதவர்கள் சிலர், புத்தகப் புழுக்கள் என்று இழிவாகப் பேசுவதை நான் கேட்டிருக்கின்றேன்.

மண் புழுக்கள் மண்ணை வளமாக்குகின்றன. புத்தகப் புழுக்கள் மனதை வளமாக்குகின்றன என்பதை இந்த இடத்தில் நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

நூல்கள் வாசிப்பது என்பது ஓர் அற்புதக் கலை ஆகும். வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்தி நினைவுத்திறனைக் கூட்டும். கற்பனையையும், அறிவின் மேதா விலாசத்தையும் செழுமை செய்யும். புதிய புதிய எண்ணங்களையும் தந்து கொண்டே இருக்கும். வாசிப்பது என்பது சிறுகதையல்ல, அது ஒரு தொடர்கதை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் அவர்கள் சோவியத் இரஷ்யாவில் இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய போது ஒரு நாளை பன்னிரண்டு மணி நேரம் படிப்பதிலும், படித்ததைச் சிந்திப்பதிலும் செலவிடுவாராம். இச்செயலே அப்போதைய இரஷ்யாவில் அதிபராக மட்டுமல்ல சர்வாதிகாரியாகவும் இருந்த ஸ்டாலின் அவர்கள் நன்மதிப்பைப் பெறக் காரணமாயிருந்தது.

இளமையில்தான் மிகச்சிறந்த பண்புகள் பதியம் போடப்படுகின்றன. நூல்கள் வாசிக்கும் ஆர்வத்தை இளமையிலேயே ஊட்ட வேண்டும். பிள்ளைகள் பெற்றோர்கள சொல்வதிலிருந்து கற்றுக்கொள்வதை விட பெற்றோர்கள் செய்வதை பார்த்து மிகுதியாக கற்றுக் கொள்கிறார்கள். எனவே முதலில் பெற்றோர்கள் நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு முறை எட்டயபுரம் மகாராஜாவுடன் சென்னைக்குச் செல்ல ஆயத்தமாக இருந்தாராம் பாரதியார். அவர் வீட்டைவிட்டுப் புறப்படும் தருணத்தில் "செல்லம்மா! வரும் போது உனக்குத் தேவையான சாமான்களை வாங்கி வருகிறேன்" என்று மனைவியிடம் சொல்லிச் சென்றாராம். ஆனால், திரும்பி வரும் போது மகாராஜா கொடுத்த பணத்தில் மூட்டை மூட்டையாக புத்தகங்கள் வாங்கி வந்து போட்டாராம்.

அந்த நேரம் செல்லமாவுக்கு பெரும் கோபமாக வந்ததாம். தன்னை கோபமாகப் பார்க்கும் மனைவியிடம், "செல்லம்மா! அழியும் பொருளைக் கொடுத்து அழியாத செல்வத்தைக் கொண்டு வந்துள்ளேன்" என்று கூறி சமாதானம் செய்தாராம், பாரதியார். உண்மையும் அதுதான். பலருக்கு நூல்களுக்கு விலைகொடுத்து வாங்கிப் படிக்கிற பழக்கம் அறவே கிடையாது. யார் படிக்கிறார்களோ அவர்களிடம் சென்று இரவல் வாங்கிப் படிப்பவர்களே அதிகமாகும். அப்படி இரவல் வாங்கிச் செல்பவர்களில் பலர் நூல்களைத் திருப்பித் தருவதே இல்லை. இதை நான் என்னுடைய அனுபவத்திலும் கண்டிருக்கின்றேன். ஒருவருக்கு நான் பணம் கொடுப்பதை எழுத மறந்தாலும், புத்தகம் கொடுப்பதைப் பதிந்து வைக்க மறக்கமாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை ஆங்கில நாடக நூலாசிரியர் பெர்னாட்ஷா அவர்கள் பேசும்போது" புத்தகங்களை இரவலாக வாங்கும் சிலர் திருப்பித் தருவதே கிடையாது. இன்று என்னிடம் பெரியநூலகமே உள்ளது. அதில் உள்ள புத்தகங்கள் அப்படி வந்தவையே" என்றாராம். இரவல் கேட்கும் போது மறுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அது மட்டுமல்ல அப்படியே நூல்களை இரவல் வாங்கிச் சென்று திருப்பிக்கொடுத்தாலும் அது உருக்குலைத்து கிழிந்து அழுக்காக்கி வந்து சேரும் சந்தர்ப்பங்களுமுண்டு.

"பொன்னள்ளித் தந்தாலும் தருவேன் அன்றி புத்தகத்தை நானிரவல் தரவே மாட்டேன்! கன்னியரை, புத்தகத்தை இரவல் தந்தால் கசங்காமல் வீடு வந்து சேர்வதில்லை!" என்பார் கவிஞர் சுரதா. எனவே சிறந்த நூல்களுக்குச் செலவிடுவது செலவே அல்ல. அதுவே சிறந்த சேமிப்பு ஆகும். பணம், பொருள், நகை போன்ற சேமிப்புக்கள் உறவுகளுக்குள் அமைதியை அழித்து, பிரிவினையை உண்டு பண்ணுபவை ஆகும். இடுக்கண் வருங்கால் காலத்தில் உடுக்கை இழந்தவன் கை போல ஓடி வந்து உற்ற துணையாக , வழி காட்டியாக இருப்பவை நூல்களே. நமக்கு மட்டுமல்ல அடுத்த தலைமுறைக்கும் உங்களது சந்ததியர்க்கும் நூல்கள் வழிகாட்டும், வாழ்வில் ஒளி காட்டும் என்பதே வெளிப்படை உண்மை ஆகும்.

முன்பெல்லாம் தங்களுக்கு படிக்கத் தெரியவில்லை என்றாலும் புத்தகங்களை வீட்டில் வைத்துப் பாதுகாப்பார்களாம். ஏன் தெரியுமா? தமது சந்ததியர்க்கு பயன்படுமே என்ற நம்பிக்கை ஆகும். பாடநூல்களைப் படிப்பது மிகையாக மதிப்பெண் பெறுவதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் பொது நூல்கள் வாழ்க்கை முறை மற்றும் ஒழுக்க நெறிகளை நோக்கமாகக் கொண்டது. நல்வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பது நற்குணங்கள். அந்த நற்குணங்களை நம்முள் விதைப்பவை நல்ல நூல்களே. படிக்க எடுத்த பிறகு படித்து முடிக்கும் வரை கீழே வைக்க விடாமல் நமது ஆர்வத்தை தூண்டச் செய்யும் புத்தகம் எதுவோ, அதுவே சிறந்த புத்தகம். பக்கத்துக்குப் பக்கம் அடிக்கோடு இட்டு வைக்கக்கூடிய அற்புத வரிகளைத் தாங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிற புத்தகம் எதுவோ. அதுவே சிறந்த புத்தகம். ஒரு முறைக்குப் திரும்பத் திரும்ப படிக்கத் தூண்டும் புத்தகம் எதுவோ. அதுவே சிறந்த புத்தகம்.

தூங்கச் சென்றவன் தூக்கம் வருவதற்காக புத்தகத்தைப் புரட்டுகின்றபோது எந்தப் புத்தகம் அவனைத் தூங்க விடாமல் புரட்டிப் போடுகிறதோ? நிம்மதியான தூக்கம் வருகின்ற போதும் அக்கணத்தில் எந்த நூல் ஒருவனை விழிப்படையச் செய்கிறதோ அதுவே சிறந்த புத்தகம் ஆகும். நல்ல நூல்களைப் படிப்பதற்கு ஆகும் நேரத்தை விட அவற்றை தேர்ந்தெடுப்பதற்கே அதிக நேரம் தேவைப்படுகின்றது.

ஒருவரைப் பார்த்து "உங்களுக்கு புத்தகம் படிக்கிற பழக்கம் ஏதாவது உண்டா?" என்று இன்னொருவர் கேட்டிருக்கிறார்.

**"உண்டு என்றார்" அவர்.**
**"எப்போது படிப்பீர்கள்?" என்று கேட்டார், இவர்.**
**"இரவில் படுக்கையிலே படுத்துக்கொண்டு தூங்கும் முன்பு" என்றார் அவர்.**
**"ஏன் அந்தச் சமயத்தில் படிக்கிறீர்கள்?" என்று கேட்டார், இவர்**
**"அப்படிச் செய்தால் தான் விரைவில் தூக்கம் வரும்" என்றார், அவர்**

**எழுத்தாளர் சமரபாகு உதயகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணையைப் பேச வைத்த வீணை பாலச்சந்தர்

**வீ**ணை பாலசந்தரின் பிறந்த திகதி 18/1/1927 ஆகும். மேதையாக பிறந்து, மேதையாகப் வளர்ந்து, மேதையாக வாழ்ந்து, மேதையாக மறைந்தவர் பாலச்சந்தர்.

தமது ஐந்தாவது வயதில் கெஞ்சிரா பழக ஆரம்பித்த பாலச்சந்தர் தமது ஒன்பதாவது வயதில் ஹார்மோனியத்தையும், பின்னர் தபேலாவையும், சித்தாரையும் கற்றுத் தேர்ந்தார்.

'கர்நாடக இசையின் சிறப்பு அம்சங்களை வெளியிட வீணையே ஏற்றது' எனக் கண்டறிந்ததால் வீணைக்கு மாறினார். அன்னாருக்கு குரு என்று எவருமிருக்கவில்லை. சொற்களின் முழு வடிவத்தையும் வீணையிலிருந்து வெளிவரச் செய்வதே அவரது பாணியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

'இறைவன் தந்த வரப்பிரசாதம் தான் இசை' என்று முழுதாக நம்பினார். அதனால் ஆண்டவன் காட்டும் பாணிதான் பாலசந்தரின் பாணியாக அமைந்தது.

மற்றவர்களால் முடியாத ஒரு காரியத்தை சாதிக்க விரும்பினார் பாலச்சந்தர். அதன்படி சாகியத்தின் பாவம் முழுவதையும் வீணைமூலம் கொண்டு வந்தார். அதுவே இன்றும் 'காயகிமுறை' அல்லது 'பாலச்சந்தர் பாணி' என்று வழங்கப்படுகிறது.

"இசை ஒரு தெய்வீகக்கலை. இதில் கண்டபடி 'புதுமை' என்று கூறி வீணாகப் புதுமையைப்புகுத்தி, அதன் தரத்தைக் குறைப்பதை" அவர் விரும்பவில்லை அறவே வெறுத்தார். அமரர் பாலச்சந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகதேவதைகள் காட்டும் வழியிலேயே சென்றவர்; இறக்கும் வரை இசையைத் தவமாக எண்ணி அதனைப் போற்றியவர்.

பாரத நாடெங்கும், வெளிநாடுகளிலும் வெற்றிகரமான இசைப் பயணம் மேற்கொண்டவர் பாலச்சந்தர். இந்திய வானொலியிலும் மிகச் சிறந்த பல சிறப்பு இசை நிகழ்ச்சிகள் நடாத்தியுள்ளார்.

பல இசைத்தட்டுக்களை, கேஸட்டுக்களை வெளியிட்டுள்ளார். எழுபத்தி இரண்டு மேள கர்த்தா இராகங்களை வரிசைக்கிரமமாக 12 எல்.பி இசைத்தட்டுகளில் வாசித்து கர்நாடக இசை உலகிற்கு அரிய சேவை புரிந்தவர் பாலச்சந்தர்.

இவரின் பிரதம சிஷ்யைதான் வீணைகாயத்ரி. பாலச்சந்தரின் கையொப்பம் வீணை வடிவத்தில் அமைந்திருந்தது இது அன்னார் வீணை மேல் வைத்திருந்த பாசத்தை, பற்றை காட்டுகிறதல்லவா?

பாலச்சந்தர் அவர்கள் விவாதங்கள் செய்வதில் விற்பன்னராகத் திகழ்ந்தார். பல விவாத அரங்குகளில் பங்கு பற்றிய பெருமை அவருக்குண்டு. அரிய நூலகம் ஒன்றைத் தமது இல்லத்திலேயே அமைத்துப் போற்றிப் பாதுகாத்தவர் அமரர் பாலச்சந்தர் .

இனி அன்னாரது திரைப்படத்துறையைச் சற்றுப் பார்ப்போம். ஆரம்பத்தில் பால ரிஷ்ய சிருங்காரராக நடித்தவர். பாலச்சந்தர். "இது நிஜமா?" படத்தின் கதை, வசனம் பாடல்களை எழுதியுள்ளார். பத்து, பதினைந்து திரைப்படப் பாடல்களைக் கொண்ட அக்காலத் திரையுலகில் பாடல்களே இல்லாத "அந்த நாள்" திரைப் படத்தை தயாரித்து இயக்கி வெற்றிகண்டவர், பாலச்சந்தர். 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், பண்டரிபாய் நடித்து, மிகவும் வெற்றி பெற்றது அந்தத் திரைப்படம். பாலச்சந்தர், 1952ம் ஆண்டில் "ராணி" என்ற வெற்றிப்படத்தில் கதாநாயகனாக பானுமதியுடன் ஜோடி சேர்ந்து நடித்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்று பல மொழிகளிலும் பாடிப் புகழ்பெற்ற பாடகர் யேசுதாசை தமிழுக்கு முதன் முதலாக அறிமுகம் செய்து வைத்த பெருமை வீணை பாலச்சந்தருக்கே உரியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*' பொம்மை' படத்தில் தானே எழுதிய'*
*" நானும் பொம்மை ; நீயும் பொம்மை !*
*நினைச்சுப்பார்த்தால் எல்லாம் பொம்மை !*
*தாயின் மடியில் பிள்ளையும் பொம்மை !*
*தலைவன் முன்னே தொண்டனும் பொம்மை !*
*கோயிலில் வாழும் தெய்வமும் பொம்மை !*
*கும்பிடும் மனிதர் யாவரும் பொம்மை !*

என்ற பாடலை யேசுதாஸ் மூலம் பாட வைத்தார் பாலச்சந்தர். யேசுதாசும். "என்ன இந்தப்பாடல் பிச்சைக்காரன் பாடுவது போல் உள்ளதே! தமிழில் முதல் பாடலையே 'சொதப்பி' விட்டுவிடுமோ" என்று பயந்து, பயந்து பாடினார். ஆனால் மிகப் பெரிய வெற்றி பெற்று பட்டி, தொட்டி எங்கும் பாடப்பட்டது அந்தப் பாடல். தமிழில் யேசுதாசுற்கு நிரந்தர இடத்தைப் பெற்றுக் கொடுத்து, ஆரம்பமே, நல்ல ஆனந்தமே! என்றாகியது ! எல்லாப் புகழும் பாலச்சந்தருக்கே!

மேலும் 'பெண்' படத்தில் சந்திரபாபு பாடிய 'கல்யாணம் கல்யாணம்' பாடலுக்கு 'காதல் மன்னன்' ஜெமினிகணேசனும், வீணை பாலச்சந்தரும் ஆடிப்பாடிக் கொட்டமிட்டது பலரும் மறந்து விடாத ஒரு காட்சியாகும்!

இனி வீணை பாலச்சந்தர் பெற்ற விருதுகள் சிலவற்றை இங்குபார்ப்போம்.

1. தமிழ் நாடு இயல், இசை, நாடகமன்றத்தின் தேசிய விருது.
2. மத்திய அரசின் 'பத்ம பூஷண்' விருது
3. சீனாவில் உள்ள அகில உலக நுண்கலை கலாசார அக்கடமியின் 'டாக்டர்' பட்டம்.

இன்றும் 'வீணை' என்றவுடன் எம் அனைவரதும் ஞாபகத்திற்கு வருபவர் பாலச்சந்தரே;

**பாலச்சந்தர் புகழ் வாழ்க!**

கலாபூஷணம் **A. இரகுபதி பாலசிறீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயைப் போற்றுவோம் தெய்வம் மகிழும்

*" அன்பின் வடிவம் தாய்*
*தாயைப் போல் தெய்வம் இல்லை"*



ஒரு தாய்க்கு விலை மதிக்க முடியாத பொருளாக கருதப்படுவது அவள் 300 நாள் சுமந்து பெற்ற மழலைச் செல்வம், முதல் முதலாக கொடுக்கும் முத்தம் தான். இது அவளுக்கு விலை மதிக்க முடியாத பொக்கிஷம் ஆகும்.

எனவே தாயின் வயிறு, தாயின் இடை, தாயின் மடி, இம் மூன்றும் மழலைக்கு மூன்று உலகங்களாகும். குழந்தையின் முதல் ஆசான் தாய். அவளே அன்பையும், பாசத்தையும், பேச்சையும் தருகிறாள். தாயின் மடிதான் உலகத்தின் முதல் பல்கலைக்கழகம் என்று கூறலாம். தாய் அன்பின் வடிவம் அன்புக்கு உதராணமாக தாய்க்குலம் அமைகிறது.

கௌசல்யைக்கு பிறந்த மைந்தன் ஸ்ரீராமன். வலிமை மிக்க அரசனாக மாறினான். மேன்மை மிக்க சீதாதேவியின் புத்திரர்களாகப் பிறந்த, லவனும், குசனும் மிகுந்த சக்தி படைத்தவர்களாக விளங்கினர். மேலும், அன்னை ஜீஜீ பாயின் அரவணைப்பால்தான் சிவாஜி தலை சிறந்த வீரனாகப் புகழ் அடைய முடிந்தது.

தேசப்பிதா என அழைக்கப்படும் மகாத்மா காந்தி அவரது அன்னை புத்திலிபாயின் மகனாகப் பிறந்ததினாலேயே உலகப் புகழ் எய்த முடிந்தது. தன் வாழ்நாள் முழுவதும் தினந்தோறும் நம் நலனைக் கவனித்து வருபவர் அன்னையைத்தவிர வேறு எவரும் உளரா?! 'அம்மா' என்ற வார்த்தை தான் நாம் இவ்வுலகில் முதன் முதலில் பற்றிக்கொள்ளும் வார்த்தை இறுதியில் சொல்லும் வார்த்தையும் அதுவே தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் எத்தனையோ பந்தங்கள் இருக்கலாம். ஆனால் எந்த ஒரு பந்தமும் தாய் என்னும் பந்தத்திற்கு ஈடாகாது. தீய மகன் இருக்கலாம், தீய அன்னை இருக்கவே முடியாது. "பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" தாயின் பிணைப்பை மனதில் கொண்டே ஒருவனது நாடு தாய்நாடு என அழைக்கப்படுகிறது. எந்த நாடும் தந்தையர் நாடு என அழைக்கப்படுவதில்லை. எந்த "மொழியும்" தந்தையர் மொழி என அழைக்கப்படுவதில்லை. அனைவரும் தாய் மொழி என்று தான் அழைக்கின்றனர். ஒவ்வொரு சொல்லும் தாயின் உயர்வையே பேசுகிறது. தாயின் இதயம் மிகப் புனிதமானது.

எனவே, தாய் புனிதமானவள். அவளாலே சமுதாயம் உருவாகும் என்பதற்கு பின்வரும் கவிதை எடுத்துக் காட்டாக அமைகிறது.

*"தாயின் வழியில் தானே*
*சமைந்தது முதல் சமுதாயம்*
*ஆயுள் தோறும் உயரும்*
*அவளாலே மனித நேயம்"*

அத்தகைய தாயின் பாதச் சுவடுகளைப் பின் பற்றிச் செல்லும் மகன் உலகப்பிரசித்தி அடைகிறான். தாயின் எண்ணங்களும், செயலுமே மனிதனை நல்ல குணவானாக புகழ் பெற்றவனாக, அறிவில் சிறந்தவனாக ஆக்குகின்றன. பெற்றோர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது தாய், தந்தை எனத்தான் குறிப்பிடுகிறார்கள். தாய்க்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. நாமங்களை எடுத்துக் கொண்டால் லக்சுமி நாராயணன் என்ற பெயரில் முதலில் லக்சுமி, பிறகே நாராயணன் என்ற பெயர் தொடர்கிறது. அதே போல்த்தான் சீதாராமா என்ற பெயர் வழங்கப்படுகிறது. அவ்வாறே பார்வதி பரமேஸ்வரரும், இவ்வாறே முதலில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மனிதன் வெளியுலக விஷயங்களைப் பற்றியே நினைத்து அதற்கேற்ப தன்னையும் செயல்களில் ஈடுபடுத்திக்கொள்கிறான். வெளிப்புறமாக காணும் அனைத்தும் நிரந்தரமற்றவை. நிரந்தரமானது ஆத்ம தத்துவம் மட்டுமே! இங்கு தாய் என்பவள்தான் ஆத்மா! தாயை மறப்பது சரியா? அவளே ஆத்மா என்பதால் தாயை மறப்பது எங்ஙனம் சரியாகும்? இறைவன் கூட தாய்க்கு அடுத்தே வருகிறார். "மாதா, பிதா குரு, தெய்வம் " என,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தாயில் சிறந்த கோயிலும் இல்லை*
*தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை*
*ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன*
*அன்னை தந்தையே அன்பின் எல்லை"*

வேதமும் புராணங்களும் இதிகாசங்களும் தாய்க்கு முதலிடம் கொடுத்து உயர்ந்த பீடத்திற்க்கு உயர்த்தியுள்ளமை கண்கூடு எத்தனை துயரிருந்தாலும், எத்தனை கஷ்டங்கள் நேரிடினும் நேரடியாக நமக்கு உதவுது தாயன்பு தான். நமது ஆசைகள், விருப்பு , வெறுப்பு அனைத்தையும் உணர்ந்தவள் அன்னையே! ஆகவே முதலில் வாழ்வில் தாயைப் பற்றிய தத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

காலை விடிந்ததிலிருந்து, இரவு வரை நம் கண்முன்னே இருப்பது தாய்தான்! நாம் படுக்கையிலிருந்து எழுந்து பின்னர் துயிலும் வரை எமக்கு உணவளிப்பது அவளே!

நாம் தாய் தந்தையரை மதித்து சேவை செய்து வாழ வேண்டும். எமது புத்தி, இரத்தம், உணவு, வளம், வாழ்க்கை இவையெல்லாம் எமது பெற்றோர்கள் எமக்களித்த செல்வங்களே! கண்ணுக்குத் தெரியும் தெய்வங்களான அன்னை, தந்தையரை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பெற்றோரை நீ வணங்கும் போது, அங்கு இறைவன் பிரத்யட்சமாவான்.

தாய் தந்தையரை கௌரவமாக நடத்த வேண்டும். அவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். இந்த அன்பின் மூலமாகத் தான், தெய்வீக அன்பை உணர்ந்து கொள்ள முடியும். தாய் தான் முதலில் தயை, அன்பு பொறுமை, அடக்கம், சத்தியம், தியாகம் போன்றவற்றை குழந்தைக்கு கற்றுத் தருகிறாள்.

தாய் தான் தன் மகற்கு சுட்டிக் காட்டி "இது தான் உனது தந்தை!" என அடையாளம் காட்டுகிறாள்.

*"தகப்பனைக் காட்டும் தாயால்*
*சுகப்படும் குடும்பம் தன்னால்*
*உவப்புடன் எதுவும் முடியும்*
*தாயால் பொழுது விடியும்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை மகனுக்கு "மகனே இது தான் உன்னுடைய குரு! அவர் சொல்வதைக் கேள்!" என்று அறிமுகப்படுத்துகிறார். குரு, அவனை இறைவனை வணங்க வழிகாட்டுகிறார். எனவே தான் தாயை முதலும் தந்தையை இரண்டாவதாகவும் அதற்கடுத்து குருவையும் எடுத்துக் காட்டுகின்றனர். இவ்வுலகில் பலவற்றையும் காண்பதற்க்கு அனுபவித்து உணர்வதற்க்குத் தாயே பொறுப்பாகிறாள்.

பெண்களிடம் தியாகம் அதிகம் நிரம்பியிருக்கிறது. பகவத்கீதையில் பெண்களிடம் ஏழு சக்திகள் நிறைந்திருப்பதாகக் கூறப்படடிருக்கிறது.

அவை தயை, தியாகம், பொறுமை, மன்னிக்கும் மனப்பாங்கு, பிரேமை இரக்கம் என்பனவாகும். பெண் சக்தியின் அம்சம். விதிவிலக்கு இருப்பினும் பெண் மிகவும் புனிதமானவள்.

எனவே, நாம் தாயை மதிக்க வேண்டும். அவர்களது கட்டளையை சிரமேற் கொண்டு செயல்பட வேண்டும். எத்தனையோ சின்னச் சின்ன விஷயங்களில் எல்லாம் தாய் எம்மை காப்பாற்றுகிறாள். தாய்க்குலம் கண்ணீர் சிந்தாது கவலை கொள்ளாது நாம் அன்பாக பார்த்தாக வேண்டும். முதுமையில் அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்ப்பது பழிச்செயலாகும். உங்களுக்காகத் தாய் கஷ்டப்படவில்லையா? தாய்க்காக நீங்கள் கஷ்டப்பட்டால் என்ன? எம்மைப் பெற்றெடுத்து வளர்த்த தாயை எம்முடனேயே இறுதிவரை வாழ வைத்து, திருப்திப்படுத்த வேண்டும்.


நமது சுயதிருப்திக்காக, சுயநலத்திற்காக தியாகம் செய்வதை தாயின் அன்புக்காகத் தியாகம் செய்தல் மேலானது. நாம் தாயின் அன்பைப் பெறுபவராக வாழ வேண்டும் அன்னை மகிழ்ந்தால் ஆண்டவன் மகிழ்வார்.

*"தாய் ஒன்றும் குப்பை அல்ல*
*முன்னின்று ஒதுக்கித் தள்ள"*

ஆக்கம்
**கலைச் செல்வி**
பழைய மாணவி
யா/ இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இந்து மகளிர் கல்லூரி - 1970 ஆம் ஆண்டு அதிபர், ஆசிரியர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகத்தில் நாம்

**யு**கங்கள் நான்கு. அவையாவன, கிருதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. இந்த யுகங்களில் கலியுகத்தில் நிரம்ப அதர்மம் இடம் பெறல் சாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது. கிருதா யுகத்தில் நூறு விகிதம் தர்மம் நிலைக்கும் என்றால், நாம் வாழும் கலியுகத்தில் இருபத்தைந்து விகிதமே தர்மம் நிலைக்க வாய்ப்புண்டு, என்பது புராணங்கள் தரும் செய்தி அப்படியாயின், அதற்குக் காரணம் யார்? வினாவித்தான் ஆக வேண்டும். விடையும் கண்டறிந்தாக வேண்டும். நாம் தான் இதற்கு காரணம் என்பதையும் புரிந்தாக வேண்டும். முன் ஜன்மங்களில் யாம் செய்த கர்மங்களின் பிரகாரம் தான், இக்கலியுகத்தில் யாம் பிறந்திருக்கலாம் அல்லவா? எனவே நாம் தான் நமது செயல்களை, அதாவது கர்மங்களை நல்ல வழியில் நெறிப்படுத்தியாக வேண்டும். கலியுகத்தில் நாம் உய்வு பெற மார்க்கம் உண்டு. அவை என்ன என்பதை கிருஷ்ணபகவான் கூறிப்போயுள்ளார். இது பற்றி பின்னர் நோக்குவோம்.

இது கண்டறிய யாம் சற்று பின் நோக்கிச் சென்றாக வேண்டும். கலியுகம் ஆரம்பமாக உள்ள காலம். அது யாதவ குலமே அழிய ஆரம்பிக்கின்றது. மக்கள் தீய கனவுகளைக் காண்கிறார்கள். அவர்களுடைய கனவிலே, கண்ணபிரானுடைய ஒளிமயமான சக்கரம், அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, விண்ணில் பறந்து சென்று மறைகின்றது. ஸ்ரீ கிருஷ்ணனது தேரை அவருடைய குதிரைகள் இழுத்துக் கொண்டு சமுத்திரத்தை நோக்கிச் செல்கின்றன. யாதவர்கள் கடல் ஓரத்தில் முளைத்திருந்த கோரைப்புற்களைப் பிடுங்க, அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரும்பு உலக்கையாக மாற, அவர்கள் அதைக் கொண்டு ஒவ்வொருவரை, அடித்து கொன்று அழிகின்றார்கள். இவற்றை, இந்த அழிவுகளையும், மறைவுகளையும், மாற்றங்களையும் கிருஷ்ணபகவான் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இவை நடந்தாக வேண்டும், என்ற கால மாற்றம் அவருக்குப் புரிகின்றது. ஒரு பக்கத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணபிரானை எதிர்பார்த்துக் கொண்டு பலராமர் காத்திருக்கின்றார். கண்ணபிரான் வந்ததும் அவர் யோகத்தில் ஆழ்கிறார். அவருடைய முகத்திலிருந்து வெண்மையான ஒளி கொண்ட நூறாயிரம் ஒளி நாகம் ஒன்று வெளிப்படுகிறன்றது. மலைபோன்ற அந்த ஆதிசேஷன், என்னும் நாகம், கடலில் பிரவேசிக்கின்றது. அந்ததளவில் அவருடைய அவதாரம் முற்றுப் பெறுகின்றது. கிருஷ்ணர் ஒரு மரத்தின் அடியில் அமர்கிறார். அவரும் தனது அவதாரத்தை முடித்துக் கொண்டு வைகுண்டம் செல்லும் பொருட்டு யோக நிலையில் அமர்கிறார். இந்நிலையில் ஒரு சில முனிவர்கள் கிருஷ்ண பகவானிடம், அவசர அவசரமாக வந்து, அவரை வணங்கி 'பகவானே! நீங்கள் எங்கள் எல்லோரையும் விட்டு வைகுண்டம் சென்று விட்டால், இனி வரப்போகும் கலியுகத்தில் எமக்குத் துணை யார்? இனி வரவிருக்கும் வெம்மையான கலியுகத்தில் உம்மை விட்டால் எமக்கு உய்வு ஏது? என்கின்றனர். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர் பதில் தருகிறார், "முனிவர்களே! நீவிர் வருந்தற்க! கொடியதான கலியுகத்தில், உங்களுக்கு ஐந்து பொருட்கள் உய்வைத்தரும். அவற்றைத் தவறாது தினமும் பூசித்து நலம் அடையுங்கள் என அவர்களைதேற்றி அனுப்புகின்றார் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா குறிப்பிட்ட அந்த ஐந்து பொருட்களுமாவன :-

1. சந்திரனைச் சடையில் தரித்த சிவபெருமானுடைய திருவடிக் கமலங்கள்.
2. அத்திருப்பாதங்களை பூசிக்கத் தூய நீர்.
3. அர்ச்சிக்க மலர்.
4. செபிக்க, சிந்திக்க திருவைந்தெழுத்து
5. அணிய வெண்ணீறு.

இவை ஐந்தும் கலியுகத்தில் வாழும் மாந்தர்க்கு நல் வழி வாழ நற்பயன் அடையத் துணை நிற்கும் என்று கூறி, விளக்கி கிருஷ்ண பகவான் தனது அவதாரத்தை முடித்துக் கொள்கிறார்.

*'திங்கள் கண்ணிப்பூத்தேன் சேவடிக்கமலம் உண்டு*
*கொங்கவிழ் மலரும் உண்டு*
*குளிர் தரு புனலும் உண்டு*
*தங்கும் அஞ்செழுத்தும் உண்டு*
*தவள வெண்ணீறும் உண்டு*
*வெங் கலிக்கு உடைவதென்னே !*
*வெளிற்று அறிவு உடையவரே போல'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில், சைவசமயத்தின் முழு முதற் கடவுளான சிவனாரை இக்கலியுகத்தில் வாழும் யாம், தினமும் தவறாது திரிகரண சுத்தியோடு வழிபட்டாக வேண்டும். மணிவாசகர் கூறித்தந்த படி அவனருளினாலே அவன் தாள் வணங்கி சிந்தை மகிழ்வோம். பின்னர் இறையை மலரிட்டு அர்ச்சித்தாக வேண்டும். அன்றலர்ந்த மலர்களை விட ஐயனுக்கு வேறென்ன வேண்டும்! அடுத்து தூய நீரான தீர்த்தத்தை நிவேதித்து திருவைந்தெழுத்தையும் ஓதி, தூபதீபம் காட்டி தமிழோடு இசைபாடி வழிபட்டாக வேண்டும். இவற்றையே அப்பர் சுவாமிகள்

*'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்*
*தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்*
*நலம் தீங்கினும் உன்னை மறந்தறியேன்*
*உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்*

என்று பாடியருளினார் போலும்!

தினமும் ஐந்தெழுத்தை ஓதுவது சாத்தியமா? சாத்தியமே! என்பது பதில். அதற்கென நேரங்கள் உண்டு, காலை, மாலை, நித்திரைக்கு செல்லும் போது, இவை வெண்ணீறும் அணிந்து பஞ்சாட்சர மந்திரமும் ஓத, உகந்த நேரங்களாம். நாம் மாத்திரம் இவற்றை அனுசரித்தால் போதாது, எமது குழந்தைச் செல்வங்கட்கும் இந்நன்நெறியை யாம் பயிற்றுவித்தாக வேண்டும். இது எமது தலையாய கடமையாகும்.

இன்று பெற்றோருக்கு அதிக பொறுப்புக்கள் உண்டு. குழந்தைகள் மத்தியில், சமய சம்பிரதாயங்கள், உண்மைகள், நம்பிக்கைகள் அருகத்தொடங்கியுள்ளன. சில விடயங்கள் குழந்தைகட்கு எங்கே புரியப் போகின்றது என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். இன்றைய நிலையில் குழந்தைகளுக்கு நாம் புரிய வைக்க வேண்டிய சமய பழக்கங்கள் நிரம்ப உண்டு, இவர்களுக்கு, அவற்றைப் புரிந்து கொள்ளும் சக்தியும் நிரம்ப உண்டு. சிறியவர்களும் பெரியவர்களும் இவற்றை புரிந்து கொண்டால், கலியுகம் எம்மை ஒன்றும் செய்து விட முடியாது. அகத்தும், புறத்தும் எம்மிடம் தூய்மை வேண்டும், அத்தூய்மை மனத்திலும், வாக்கிலும், காயத்திலும், இருந்தாக வேண்டும். வீட்டில் சமயம் வளர்ந்தால், அது நாட்டில் பிரதிபலிக்கும். உலகெங்கும் பரவும் தீயவை செய்ய மனம் அஞ்சும். தர்மம் செய்ய மனம் தூண்டும், சமய நம்பிக்கை மன அடக்கத்தையும் அறிவையும் வளர்க்க உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண வரலாறுகளின் படி கிருதயுகத்தில், தேவர்களும் அசுரர்களும் வெவ்வேறு உலகத்தில் வாழ்ந்த வண்ணமே போரிட்டனர். தொடர்ந்த த்ரோதா யுகத்தில் இவ்விரு சாராரும், ஒரே உலகில் வாழ்ந்த வண்ணம், வெவ்வேறு பகுதியிலிருந்த வண்ணம், போரிட்டனர். அடுத்து வந்த துவா யுகத்தில் இரு சாராரும் ஒரே குடும்பத்தில் வெவ்வேறு இடத்தில் இருந்து போராடும் வகையில் செயற்பட்டனர். இன்று நாம் வாழும், கலியுகத்திலோ, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இது கண் கூடு. இங்கே தான் மனிதனின் மனம் அமைதியை இழக்கின்றது. நிம்மதி குறைந்த நிலையில், அவன் பரிதவிக்கின்றான். இந்நிலையை யாம் நீடிக்க விடக்கூடாது. நாம் விழிப்படைய வேண்டும். உசாராக வேண்டும். சமய வழக்கங்களைப் பின்பற்றி நடைமுறைப்படுத்தல் வேண்டும். இது அவசியம். இறைசிந்தனை செய்ய இந்துக்களாகிய எமக்கா, நாளும் பொழுதுமில்லை!? விரதங்களும் பண்டிகைகளும், விழாக்களும் எமக்குத்தான் மாதம் தோறும் இடம் பெறுமாறு அமைந்துள்ளனவே! இவற்றிற்கு உதாரணமாக தைமாதத்தில் தைச் செவ்வாய், தைப் பொங்கல், மாசி சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பிறப்பு ஆடிச் செவ்வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச்சனி ஐப்பசி வெள்ளி, நவ இரவுகள், கார்த்திகைச் சோமவாரம் மார்கழித் திருவாதிரை, என இத்தகைய புண்ணிய நாட்களிலே இந்துக்களாகிய நாம், தூய நீர் கொண்டு அன்றலர்ந்த மலர் கொண்டு, திரு வெண்ணீறு அணிந்து பண்ணிசை பாடி, பஞ்சாட்சர மந்திரம் உச்சரித்து, பிறை சூடிய சடையுடை யானின் திருவடிகளைத் தொழுதால், தொழுத பின் எமது காரியங்களை ஆரம்பித்தால், கலியுகம் பொன்யுகமாக அல்லவா மாறி எமக்கு நல்லன எல்லாவற்றையும் நல்கும்! எனவே கலியுகத்தில் என்ன தான் நேரக்குறைவு ஏற்படினும், யாம் எல்லோரும் தவறாது செய்ய வேண்டியது இறைவழிபாடும், இறைசிந்தனையுமேயாகும் எனவே அவனருளாலே அவன் தாள் வணங்கி நிற்போம்.

கலாபூஷணம் **இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** B.A, M.A
முன்னாள் அதிபர்
யாழ் / நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை**

# இன்னும் படிக்காத பாடங்கள்

**ஊஷ்........**
உங்களைத் தான்
ஒரு நிமிஷம் !
இயற்கைதான் ஆசிரியன்
தெரியுமா ?
ஐயறிவு ஜீவன்கள் நடத்தும்
ஆறறிவுப் பாடங்களை
அறிவீர்களா ?
எப்போது படிக்கப்
போகிறீர்கள் நீங்கள் ?
காற்றின் சுதந்திரம்
கடலின் பொறுமை
வானத்தின் கருணை
பூமியின் வள்ளல் தன்மை
புறாக்களின் கற்பு
அன்றில்களின் காதல்
சேவல்களின் கடமை
காகங்களின் ஒற்றுமை

நாய்களின் நன்றி
மான்களின் மானம்
குதிரைகளின் வேகம்
எறும்புகளின் உழைப்பு
பசுக்களின் தாயன்பு
இவ்வாறு அஃறிணைகளிடம்
ஆறறிவு படித்து, நீங்கள்
உயர்திணைகளாவது எப்போது ?

**நன்றி – இனியவன் இசார்தீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டணங் கண்ட பட்டிக் காட்டான்

**பட்டிக் காட்டான் :**

பாவாடை என்னும் உடுப்புள தா ? அது
பாலர்தீ பாவளிப் பண்டிகைக் காம்.
பூவேலை யாவையும் பெற்றுளதாம். அந்தப்
புத்தாடை உண்டோக டைக்காரரே ?

**கடைக்காரன் :**

நல்லபாவாடைகள் நம்மிடம் உண்டிது
நலநாக ரீகத்து நாரியர்க்காம்.
வெல் வெற்றுப் பட்டிது ! இங்கிலன்ட் மேக்கிது !
வேண்டுமோ பார்த்து விளம்புவிரே.

**பட்டிக் காட்டான் :** ( சட்டைகளைப் பார்த்து விட்டு )

கையிதற் இல்லை கழுத்துமே இல்லையே !
காலில் மறைப்பையும் காணவில்லை
நெய்யுந் தொழிலாளி நெஞ்சுமறைப்பையும்
நெய்ய மறந்து விட்டானோ ஐயா?
அச்சம் நாணம் மடம் ஆனபயிர்ப்புடை
அரிவையர்க் கீதெல்லாம் ஆகாதையா!
பிச்சை வேண்டாமையா நாயைப்பிடியுங்கள்
பேசாமல் வீட்டுக்குப் போய் விடுவோம்.

**அவன் மனைவியிடம் :**

நேத்து தினம்முழு நேரமும் பட்டணம்.
நீண்டகடையெல்லாம் பார்த்து வந்தேன்.
பீத்தலுடையின்றிப் பெண்களின் மானத்தைப்
பேணும் உடுப்பங்கே இல்லையடி !

**நன்றி – திரு. S. T. தெட்சணாமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை

அன்னையும் பிதாவும் முன்அறி தெய்வம். நாம் ஆரம்பக் கல்வியில் கற்ற பாடம். எவ் உயிர்க்கும் முதல் சொல் "அம்மா". நம் எதிர் நின்றுபேசும் தெய்வம் அம்மா, அம்மா என்ற சொல்லுக்கு நிகரான சொல் வேறு எதுவும் இல்லை. தாயிற் சிறந்த கோவில் இல்லை. அன்னையும் தந்தையும் தானே பாரில் அண்ட சராசரம் கண் கண்ட தெய்வம்! அண்ட சராசரம் வரை புகழும் தாய் தந்தையரை நாம் எப்படிப் பேணல் வேண்டும்? பத்து மாதம் நம்மை வயிற்றில் சுமந்து படாத பாடு எல்லாம் பட்டு, எம்மை பூமிக்குக் காட்டியது தாய் அல்லவா! பூமியின் தாய் தான் பூமாதேவி. நாம் செய்யும் எவ்வளவோ கொடுமைகளைத்தாங்கும் பூமியை பெற்றதாய்க்கு ஒப்பிடுகிறார்கள். கொடிய மிருகங்கள் தாம் ஈன்ற குட்டிகளை வாயினால் கவ்வி வேறு இடம் கொண்டுபோகும். பறவைகள் முட்டை இடுவதற்கு எவ்வளவோ கஷ்டப்பட்டு தங்கள் முயற்சியால் கூடு கட்டி கூட்டில் முட்டை இட்டு குஞ்சு பொரித்து தன் சொண்டுக்குள் உணவு எடுத்து குஞ்சுகளை வளர்க்கும். கங்காரு என்னும் மிருகம், தான் ஈன்ற குட்டியை தன் வயிற்றுள் வைத்தே வளர்க்கும். இப்படியே ஒவ்வொரு இன மிருகங்களும் தன் பிள்ளைகளை மிகக் கவனமாக வளர்ப்பது உண்டு. நாம் ஆறு அறிவு உள்ள மனிதர்கள். நாம் எம்மைப் பெற்றவளிடம் மதிப்பு, மரியாதை, அன்பு, பாசம் காட்டி தாய் சொல்லைத்தட்டாது வாழ்ந்தால் எமக்கு என்றும் நன்மை உண்டு. பெற்ற தாயைப்பற்றிய பாடல்கள் தான் எவ்வளவோ உண்டு. பாடல்களைப் பாடி அதன் கருத்துக்களை உணர்ந்தால் நாம் எம்மைப் பெற்ற தாய்க்கு எவ் விதத்தில் கடமைகள் செய்ய வேண்டும் என்ற உணர்வுகள் வரும். எம்மை நல் வழிப்படுத்துவது தந்தை, தந்தை சொல் மிற்கதோர் மந்திரம் இல்லை. தாய், தந்தையர் எம்மை நல்வழிப்படுத்தி எம்மை உலகில் வாழ வைப்பவர்கள். நாம் தாய், தந்தையிற்கு எப்படிக் கடமைகள் செய்ய வேண்டும் அவர்களுக்கு வயது போன காலத்தில் அவர்களை எம்மால் இயன்ற அளவு குழந்தைகள்போல் கவனித்தல் எம் கடமை. "அன்னை ஓர் ஆலயம்"

ஆக்கம் : **சத்தியலெட்சுமி சிவலிங்கம்**

(பழைய மாணவி) இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கு வேண்டியவை

*"ஆத்தி சூடிக்கு ஔவை*
*அறக் கூற்றுக்கு மூதாட்டி"*

அறம் செய்ய விரும்பு என்று தமிழ் மக்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறார் ஔவையார். அறம் செய்யுங்கள் என்று அவர் வற்புறுத்தவில்லை. அறம் செய்வதற்கேற்ற வசதிகளும் வாய்ப்புக்களும் எல்லோரிடமும் இருப்பதில்லை, ஆகவே அப்படிப் பட்டவர்களால் எப்படி அறம் செய்ய முடியும்? என்ற கேள்வி எழலாம்.

உணவு இது நமது உடலுக்குத் தேவை உடல் உயிருக்குத் தேவை. உடம்பு அழிந்தால் உயிர் அழியும் என்று திருமூலர் கூறினார். சுவர் இல்லாமல் சித்திரம் எழுத முடியாது. எனவேதான் உயிர் வாழும் கொள்கலமான உடம்பு மிகவும் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது.

உடம்பு நிலைத்து நிற்பதற்கு உணவு அவசியம். எனவே இதையுணர்ந்த சீத்தலைச் சாத்தனார் தன் காப்பியம் முழுவதும் உணவிற்கே மிகவும் முக்கிய இடமளித்துப் பேசுகிறார். தானத்தில் சிறந்தது அன்ன தானம் என்பதை வலியுறுத்துகிறார். இவ் அறத்தர்மம் மணிமேகலையில் முழுமையாக புரிந்து கொள்வதற்கு துணைபுரிகிறது.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று வரிசைப்படுத்தும் பட்சத்தில் கூட உணவை முதன்மைப்படுத்தியதன் நோக்கம் உணவு அதி முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. உணவு இல்லையேல் உடல் இல்லை. நாம் இயங்க உணவு முக்கியம் எனவே தான் ஔவையார் அறம் செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறார்.

எனவே உணவு உண்டு, உடல் காத்து உயிர் ஓம்பினால் தானே மானம் காக்க உடை தேவை, பின்பு இருக்க இடம் தேவை, உண்ண உணவு கிடைக்காத போது பின்னால் இருக்கின்ற இரண்டும் தேவையற்றதுதான். அல்லது இருக்க இடமும் உடுக்க உடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவாமல் போய்விடும் என்பதனால்தான் தமிழ் சான்றோர்கள் மேற்கண்டவாறு வரிசைப்படுத்தினர் எனலாம்.

ஔவையார் "அறம் செய்ய விரும்பு" என்றார். மனதில் அறம் செய்யும் எண்ணம் உதிக்க வேண்டும். பின்னால் முடிந்தவரை பிறருக்கு உதவலாம் என்று நயமாக கூறுகிறார் மூதாட்டி. ஒன்றே செய்ய வேண்டும்; ஒன்றும் நன்றே செய்ய வேண்டும். என்பது சான்றோர் வாக்கு.

ஒவ்வொருவரும் தம்மால் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்பவராக மனவிரிவு உள்ளவர்களாக வாழ வேண்டும்.

செல்வம் இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு நிறைய உதவலாம். மேலை நாடுகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பெற்றோர் கொடுக்கும் செலவுப் பணத்தை ஆசிரியர்களிடம் கொடுத்து இல்லாதவர்களுக்கு உதவும் மனப்பான்மை, மேலை நாட்டு மாணவர்களுக்கு உதித்த தென்றால் மிகையாகாது. எனவே இல்லாதவர்களுக்கு உதவும் மனப்பாங்கு கொண்டு பொதுமை உணர்வுடன் பரோபகார மனத்துடன் வாழ வேண்டும். இதுவே தமிழர் பண்பாட்டின் சிறந்த சாரமாக விளங்கியது; விளங்கவும் வேண்டும்

சிலர் நல்லதை நினைப்பதும் இல்லை, செய்வதும் இல்லை; பிறருக்கு தீமை செய்து, அவர்கள் வருந்துவதைக் கண்டு களிக்கின்றனர். பிறர் கஷ்டப்படுவதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்கிறார்கள் அத்துடன் பிறர் வாழ்வைப் பறித்து தாம் வாழ்கின்றனர்.

*"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல*
*அன்றே மறப்பது நன்று"*

என்பது வள்ளுவர் கூறிய வாய்மொழியாகும். பிறர் எமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்துவிட லாகாது. ஆனால் தீமை செய்திருந்தால் அதனை உடனே மறந்து விட வேண்டும். எனவே கடுகளவும் மனதில் அடுத்தவர்களுக்கு தீமை செய்யும் எண்ணம் தோன்றுவது தவறான செயலாகும், என்பது தமிழர் பண்பாட்டின் சிறந்த அம்சமாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் சமுதாயத்துள்ளே மாறுபட்ட கொடியவர்களைப் பார்க்கின்றார் ஒரு பண்பாளர் அவர் உள்ளம் வெதும்புகின்றது. அவர்கள் நிலை கண்டு இரங்குகிறார். அவர்களைக் கண்டு அஞ்சவில்லை.

"உங்களால் உலகுக்கு நன்மை செய்ய இயலாவிட்டாலும் பாதகமில்லை; தீமை செய்யாமல் இருப்பதையாவது கடைப்பிடிப்பீர்களா? என்று அறிவுறுத்துகிறார். மனதாலும் செயலாலும் தீமையை விட்டு விலக்கிவிட்டால் நன்மை மீதான நாட்டம் தானே உலகத்தில் கிடைக்கும் என்பது இயற்கையல்லவா?

*"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஒப்புமின்"*

மேலும் பழங்காலத்து வரலாற்றுக் கூற்றைப் பார்க்கும் போது பொற்கொல்லன் தீமை விளைவித்ததனால், கண்ணகியால் மதுரை மாநகரமே தீக்கிரையானது. இது வரலாறு கொடுத்த பாடம். தீமையினால் ஏற்பட்ட விளைவு எத்தனை! தசரத மன்னன் கொடுத்த வரத்தினால் இராமன் காட்டுக்குப் போக நேர்ந்தது. சூர்ப்பனகையின் தீய செயலால் சீதை இராமனைப் பிரிய வேண்டி வந்தது. தொடர்ந்து இராவணனுக்கு அழிவு ஏற்பட்டது. இவ்வண்ணம் பல வரலாற்று நிகழ்வுகளை நோக்குவோமானால் தீமையால் தீய விளைவுகள் தான் ஏற்பட்டன. எனவே எமது முன்னோர்கள் வாக்கின்படி நல்லது செய்யாமல் விடினும் தீமை செய்தல், தடுக்க வேண்டியதாகும். இப்பண்பில் உறுதி கொண்டவர்கள் நம் பழங்காலத்து முன்னோர்கள்

*"நன்மை செய்யாவிடினும்*
*தீமையாவது செய்யாது இரு"*

ஆக்கம்

**செல்வி வ.கலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா!

1. நட்சத்திர மீனுக்கு மூளை கிடையாது.
2. நண்டுக்குத் தலை கிடையாது.
3. ஆமைக்குப் பற்கள் கிடையாது.
4. வண்ணத்துப்பூச்சிக்கு வாய் கிடையாது.
5. மீனுக்கு இமை கிடையாது.
6. மண் உண்ணிப் பாம்புக்கு கண்கள் கிடையாது.
7. ஒட்டகச்சிவிங்கிக்கு குரல் கிடையாது.
8. பூச்சிகளுக்கு தொண்டை கிடையாது.
9. நுளம்பிற்கு காது கேட்காது.
10. பாம்பிற்கு காது கிடையாது.
11. ஈசலுக்கு வயிறு கிடையாது.

- பாம்பு முட்டைக்கு ஒரு அபூர்வ சக்தி உண்டு.அதன் முட்டை இடப்பட்டதின் பின், தானே பெரிதாகும்.
- உணவு உண்ணாமல் மூன்று ஆண்டுகள் வரை இடைவிடாது தூங்கும் உயிரினம் நத்தையாகும்.
- ஒக்றேபஸின்' (Octopus) இரத்தம் நீல நிறமாகும்.
- குயில் குளிர் காலத்தில் கூவுவதில்லை.
- பூச்சிகளும் புழுக்களும் தூங்குவதில்லை.
- வௌவ்வால்கள் குகைக்குள்ளிருந்து வெளியேறும்போது இடப்பக்கமாக வெளியேறும்.
- தண்ணீரில் முள்ளம் பன்றிகளை மூழ்கடிக்க முடியாது எனெனில் அதன் முட்களில் காற்று நிரம்பியுள்ளது.
- வாத்துக்கள் அதிகாலையில் மட்டுமே முட்டை இடும்.
- பல்லி, பாம்பு, முதலை போன்றன இல்லாத ஒரே ஒரு கண்டம் அன்டாட்டிக்கா.
- மண்புழு ஒரு ஏக்கர் நிலத்தில் ஓராண்டில் 18 தொன் மண்ணைத்தின்று வெளியே தள்ளுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.
- ஈயானது ஒரு நிமிடத்தில் 20,000 முறை இறக்கைகளை அடித்துக் கொள்ளுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எறும்புக்குத் தன் உடலின் எடை போன்று 500 மடங்கு எடையைச் சுமந்து செல்ல இயலும். அதற்குக் காரணம் அதன் உடலில் ஏறக்குறைய ஆயிரம் வகையான தசைகள் இருப்பது தான். இவற்றின் தசைகள் உயர்வு, சோர்வு, தளர்ச்சிக்குப்படுவதில்லை. எறும்புகளின் உணவு சேகரிக்கும் பணி வியப்பானது. எறும்புகள் முதலில் தமது உணவு தேட ஸ்காட் என்ற எறும்புகளை, புற்றிலிருந்து அனுப்புகின்றன. இந்த ஸ்காட் என்ற எறும்புகள் தாம் செல்லும் பாதையில் "பெரோமன்" என்னும் இரசாயனப் பொருட்களை வெளியிட்டுக் கொண்டே செல்லும். உணவுப்பொருட்களின் இருப்பிடம் கண்டவுடன் அவ்வெறும்புகள் தாம் வெளியிடத்திலே சென்று புற்றை அடைகின்றன். எறும்பிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஒற்றுமை, பகிர்துண்டு பல்லுயிர் ஓம்புதல், சேமிப்பு, விடா முயற்சி, வேகம், போன்றவையாம்.

நன்றி

மூலம் "அருணாவின் வியப்பூட்டும் உயிரினங்கள்"
தொகுத்தளித்தவர்
**திலகா விஜயரத்தினம்**

## எமக்குரிய அணிகலன்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | காதுக்கு அணிகலன் | - | நல்ல கேள்வி |
| 2. | வாய்க்கு அணிகலன் | - | சத்தியம் |
| 3. | கரத்துக்கு அணிகலன் | - | தானதர்மம் |
| 4. | மனதிற்கு அணிகலன் | - | தியாகம் |
| 5. | கண்ணிற்கு அணிகலன் | - | தெய்வதரிசனம் |
| 6. | எண்ணத்திற்கு அணிகலன் | - | நற்சிந்தனை |
| 7. | கைவிரலுக்கு அணிகலன் | - | நல்லனவற்றை செய்தல் |
| 8. | உடலுக்கு அணிகலன் | - | புறத்தூய்மை |
| 9. | நாக்கிற்கு அணிகலன் | - | நல்லதையே பேசுதல் |
| 10. | காலுக்கு அணிகலன் | - | நற் பாதையில் செல்லுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறிந்திருக்க வேண்டியவை

# விழாக்கள்

**25** ஆண்டு நிறைவில் வெள்ளி விழாவும்

**50** ஆண்டு நிறைவில் பொன் விழாவும்

**60** ஆண்டு நிறைவில் மணி விழாவும்

(இது வைரவிழா என்றும் சொல்லப்படும்) திருமணமாகி 60 ஆண்டு நிறைவில் சஷ்டியப்த பூர்த்தி விழாவும் கொண்டாடப்படுவது வழக்கம்

**75** ஆண்டு நிறைவில் பவள விழாவும்

**80** ஆண்டு நிறைவில் முத்துவிழாவும் சதாபிஷேகமும்,

**100** ஆண்டு நிறைவில் நூற்றாண்டு விழாவும் கொண்டாடுவது வழக்கம்.

**வெள்ளி விழா :**

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படுவது வெள்ளி விழா ஆகும். இல்லற வாழ்வின் சுகத்தை இருபத்தைந்து ஆண்டுகள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் எவ்வித இடருமின்றிப் பகிர்ந்து கொண்ட தம்பதியர் தம் குடும்ப நலன் பரிமளிக்க உதவிய உறவினரை, நண்பர்களை, அயலவர்களை, விருப்பிற்குரியவர்களை, மதிப்பிற்குரியவர்களை இருபதாவது ஆண்டின் தொடக்க நாளில் அழைத்து சிவவழிபாட்டுடன் விருந்தளித்துத் குதூகலித்து வாழ்த்துப் பெறுவர்.

**பொன் விழா :**

ஐம்பது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது பொன் விழா எனப்படும். ஒரு மனிதன் பிறந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவாகும் போது கொண்டாடப்படுவது மனித வாழ்வியல் மங்கலம் ஆகும். அப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனிதனாக வாழ்ந்திருந்தால் தான் அந்த மங்கல கருமத்திக்கு உரித்துயவன் ஆவான் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

திருமணம் செய்து கொண்ட ஆண், பெண் எனும் இருவர் குழந்தைப் பேறுடையவர்களாக, அண்டை அயலவர் உற்றார் உறவினர் போற்றும் வகையில் வாழ்ந்திருப்பின் சமூகம் அவர்களுக்குப் பொன் விழா கொண்டாட வேண்டும். எதிர்காலச் சமுதாயக் குழந்தைகள் இந்தப் பாராட்டுக்கான வாழ்த்துக்களைப் பார்த்துத் தாம் தம்மைச் செவ்விய நெறியிற் செலுத்த இவை வழி செய்யும். குறிப்பிட்ட தம்பதியர்களும் தம் உயர்விற்காக உதவிய அனைவரையும் பாராட்டிப் பொன் விழா நடாத்தி எல்லோாரது வாழ்த்துதலையும் பெறலாம்.

**வைர விழா (மணி விழா)**

அறுபது ஆண்டு நிறைவில் நடைபெறும் விழா வைரவிழா ஆகும். இதனை மணிவிழா என்றும் கூறுவர். முன்னர் குறிப்பிட்ட வெள்ளி விழா, பொன் விழா, போலல்லாது மணியான விழா என்ற வகையில் இது மணி விழா என்றாகி இருக்கலாம். சிறந்தவற்றைக் குறிப்பிடும் போது மணியான பேச்சு, மணியான கருத்து மணியான விளக்கம் என்று உயர்வைச் சுட்ட 'மணி' என்னுஞ் சொல் பயன்படுத்தப்படுவதைக் காணுகின்றோம். எனவே, விழாக்களுள் உயர்வான விழா எனச் சுட்டும் போக்கில் 'மணி விழா' என வந்திருக்கலாம்.

பிறந்த நாள் முதலாகக் கணக்கிட்டு அறுபதாவது நிறைவில் மணிவிழா கொண்டாடப்படுகின்றது.

பொன்விழாக் கொண்டாடிய மக்கள் பவளவிழாவிற்கு இடையே மணி விழா என்னும் வைரவிழாவை கொண்டாட வேண்டி ஏற்பட்டமைக்கு அவரது உத்தியோக ஓய்வு நிலைதான் காரணம் என்று சிந்திக்க மனம் உந்துகின்றது. ஆறி அமர்ந்து மனிதன் தன்னைப்பற்றிச் சிந்திக்க வாய்ப்பாக அமையும் காலம் இந்த மணிவிழாவுடன் தான் ஆரம்பமாகின்றது. மாடுண்டு கண்டுண்டு மக்களுண்டு என்று மகிழ்ந்தவற்றை எல்லாம் விடுத்து யாருடைய கட்டுப்பாட்டிற்க்கும் இடமின்றிச் சுயமான கட்டுப்பாட்டுடனாகி ஆன்ம ஈடேற்றத்திற்கான செயற்பாடுகளுடனோடு வாழ வேண்டிய காலத்தின் ஆரம்பம் இந்த மணிவிழா ஆண்டின் தொடக்க நாள் என்று துணியலாம். எனவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியான ஆண்டு என்ற சிந்தனையை இங்கும் பொருத்திப் பார்த்து வியக்க முடிகிறது.

**சஷ்டியப்த பூர்த்தி விழா :**

அறுபது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படும். மற்றொரு வகை விழா சஷ்டியப்த பூர்த்தி விழாவாகும். அதாவது, திருமணமாகி அறுபது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படுவதாகும்.

இந்தச் சஷ்டியப்த பூர்த்தி விழாவுடன் தொடர்புடைய மூத்த தம்பதியர் இரண்டாவது முறையாகவும் முழுமையான திருமணக் கிரிகைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலைமை உண்டு. மணமகன் மணமகள் இருவரும் அறுகுடனாகிய பால் வைத்து நீராட்டப்படுவர். மணமகன் பட்டுடை அணிந்து கொள்வார். மணமகள் கூறை அணிவிக்கப்படுவார். பின்னர் இருவரும் மணவறையில் இருத்தப்படுவர். அவர்களுக்கு வேண்டியவர்கள் தோழன் தோழியராக நின்று உதவுவர். திருமணக் கிரியையை நடைமுறைப்படுத்தும் குரு நிறைந்த வயதுடையவராகவும் அங்கலட்சணங்களாற் பூரணப் பொலிவுடையவராகவும், கிரியா விளக்கப் பூரணத்துவம் பொலியும் முகத்தினராகவும், எல்லோரையுங் கவரும் சாந்த குணத்தவராகவும் கிரியைகளை நடைமுறைப்படுத்தலில் நிறைந்த கவனம் உள்ளவராகவும் இருப்பதை விழா நடத்தும் நாம் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

தொடர்ந்து திருமணக்கிரியைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும் மணமகனாற் புதிதாகச் செய்விக்கப் பெற்று தாலி சபையினரின் வாழ்த்துதலுடன் உரிய போது அணிவிக்கப்படும். பின்னர் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கூடி வாழ்த்துதல் அன்பளிப்பு வழங்கல் என்பனவும் நடைபெறும். தொடர்ந்து அனைவரும் ஒன்றாக அமர்ந்து விருந்துண்டு மகிழ்வர்.

முதலிலே திருமணம் நடந்தவேளை கட்டப்பட்ட தாலி மணமகள் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் தொங்கிக்கொண்டே இருக்கவேண்டும் எனபதை நினைவிற் கொள்ள வேண்டும்.

எண்பது வயதாகும் வேளை அதே கணவன் மனைவியர் மீண்டும் திருமணத்தைச் சந்திப்பது என்பது வாழ்வினில் இடம்பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமையான, உண்மையானதொரு மங்கல கருமந்தான் என உறுதியாகக் கூறலாம்.

**பவள விழா :**

வெள்ளி விழா இருபத்தைந்தாவது வயது நிறைவில் கொண்டாடப் படுவது. பொன்விழா ஐம்பதாவது வயது நிறைவிற் கொண்டாடப்படுவது. அடுத்து வரும் இருபத்தைந்தாவது வயது நிறைவில் அதாவது எழுபத்தைந்தாவது வயது நிறைவிற் கொண்டாடப்படுவது பவள விழா. அரசினரின் கீழ் பணி புரிந்தோ அல்லது சொந்தமாகத் தொழில் புரிந்தோ ஓய்வு பெற்றுள்ள காலம். இந்தக் காலம்தான் பெரும் பயனுள்ள காலம் எனலாம். தமக்குத் தெரிந்தவற்றை தம் அறிவில் அனுபவத்திற் பட்ட கருத்துக்களை மற்றையோருக்கு வழங்கக்கூடிய காலம். அறிவு முதிர்ச்சி அனுபவ முதிர்ச்சி என்பவற்றுடனாகி வரும் நல்ல கருத்துக்களை இளைய சமுதாயத்திற்குக் கொடுக்கக் கூடிய காலம். சமூகத்திற்குப் பெரும் பயன்பாடுடையவராக வாழக்கூடியதொரு காலம். இந்நிலையிலே தான் பவள விழா எடுக்கப்படுகிறது.

இந்த நிலையிற் பவள விழா எடுக்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்டவர் எவ்வளவிற்குச் சமூகத்திற்குப் பயன்பட்டார் என்பது சிந்திக்ககப்பட வேண்டும். மக்களின் வளர்ச்சிக்கு என்ன செய்தார் என்று சிந்திக்க வேண்டும். அந்த வகையில் பயன்பாடுடையவராகி வாழ்ந்த ஒருவருக்கு எடுக்கப்படும் விழா எதிர்காலச் சிற்பிகளை மனங் குளிரவைக்கும். அவர்களை உற்சாகப்படுத்தும். சமுதாயத்தின் உயர்விற்கு இத்தகு விழாக்கள் பேருதவி அளிப்பனவாகும்.

**நூற்றாண்டு விழா :**

நூறாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது நூற்றாண்டு விழா எனப்படும். குறிப்பிட்ட நிறுவனமோ சங்கமோ ஆரம்பித்து நூறு ஆண்டுகள் நிறைவின் போது, அந்நிறுவனம், சங்கம் தொடக்க காலத்தில் இருந்து இதுவரை காலமும் வளர்ச்சி பெற்று நிலைத்து நிற்றலை எண்ணியும் அதனை பலர் அறிந்து கொள்ளும் வண்ணமாகவும் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் விழா. இது அந்நிறுவனத்தின், சங்கத்தின் வரலாற்றில் மிகமுக்கியமானதும் சிறப்பும்கொண்டமைந்த நிகழ்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதாபிஷேகம் :**

பிறந்த நூறு ஆண்டுகள் வாழ்ந்த ஒருவருக்கு நடைபெறுவது இந்த விழா. சதாபிஷேக நாயகரைப் பால் அறுகு வைத்த முழுகச் செய்து புனித ஆடை அணிந்து கொள்ளவைத்து, விபூதி தாராக்கி ஒரு கும்பத்தின் முன் இருக்கச்செய்து ஒரு குருவின் கிரியைகளுடன் விழா ஆரம்பிக்க வேண்டும். விழா நாயகரையே இறைவனாகக் காணும் குரு இறைவனுக்குச் செய்வது போன்று அபிஷேக ஆராதனைகள் எல்லாம் செய்வார். உடன் நிற்பவர்கள் திருமுறைப்பாடல்களை ஓதி வாழ்த்துவர். நூற்றாண்டை சந்தித்தவர் தெய்வீக நிலையைக் கிட்டியவர் என்ற சிந்தனைகுரியராதலை இந்தக் கிரியைகள் காட்டி நிற்கின்றன.

நூற்றாண்டு நிறைவுடனாகி வாழுபவர்கள் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினரே! அதனால் அதற்கு முன்பாகவே அந்த விழாவைக் கொண்டாடும் முறைமையும் உண்டு. ஆயிரம் பிறை கண்டவர் நூற்றாண்டு வாழ்வை அனுபவித்தவர் எனக் கண்டு எண்பது வயதின் பின்னே சதாபிஷேகத்தை அனுபவிக்கலாம் என இப்போது முடிவு செய்கின்றனர். அதனால் எண்பது எண்பத்தைந்து வயதுகளிலும் இப்போ சதாபிஷேகம் இடம் பெறுகின்றது.

இந்த மங்கல கருமங்கள் எல்லாமே சிவநினைவுடன் நடைபெற வேண்டியவை. கும்பம்வைத்துப் பிள்ளையாரை முன்னிலைப்படுத்தி மங்கள விளக்கேற்றி திருமுறைப் பாராயணத்துடன் நடைபெறவேண்டும்.

*(மூலம் "மங்கல தரிசனம்")*

தொகுப்பு

**திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்**

பழைய மாணவி

யாழ்/ இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மரத்தின் மகிமை

எமது இந்து மதத்தில் அரசு என சொல்லப்பட்ட சில விருட்சங்களுக்குப் பெருமதிப்புண்டு. அம்மரங்களையும் தெய்வங்களாகவும், தேவதைகளாகவும் போற்றி வணங்குகின்றோம். உதாரணத்திற்கு அரசு, வேம்பு, வில்வம், வன்னி, நெல்லி, துளசி போன்றவற்றைக் கூறலாம்.இவற்றுள்ளும் அரசமரம் இருக்கின்றதே, அதற்கு என்று தனி மவுசு உண்டு. அதுதான் அரச மரமாச்சே. அரச மரம், மரங்களுக்கெல்லாம் அரசானதற்கு ஒரு வரலாறு உண்டு.

அரச மரத்தை அஸ்வத்தம் என்றும் அழைப்பதுண்டு. வேள்விக்கும் அரசு பயன்படுவதனால் அரசுக்கு யாக்ஞ விருட்சம் என்றும் ஒரு பெயர் உண்டு. அரச மரத்தின் குச்சிகள் ஹோமங்கள் ஆற்றச் சிறந்தவை. அரச மரத்தை வெட்டுவதோ, எரிப்பதோ ஒவ்வாத செயலாகக் கருதப்படுகின்றது.

புத்திரப் பேற்றுக்கு அரசமரம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அரசமரம், வேப்பமரம், மாமரம் ஆகியவற்றைப் பேணி வளர்ப்பதே புண்ணிய காரியமாகும். புத்திரபாக்கியம், செல்வம், ஆரோக்கியம் ஆகியவற்றைப் பெற, நாம் இரு அரசமரங்களை பக்கத்திலே நாட்டி வைத்து பிரதிஷ்டை செய்து வளர்த்தல் முறையாகும்.இந்த இரு மரங்களுக்கும் காவலாக அருகே ஒரு வேப்பமரத்தையும் வளர்த்து அதனையும் பேணிப் பூசை செய்ய வேண்டும். இரு மரங்களைச் சோடி சேர்ப்பதனால் கிடைப்பது பெரும் பாக்கியமாகும். அதிலும் இதனால் புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று சொல்லப்படுவது ஆன்றோர் அனுபவ வாக்கு. அரசமரத்தைப் பிரதட்சணம் செய்து நிறைவான பயன்களை பெற்றவர்களின் வரலாறு பல உண்டு.

திங்கட்கிழமைகளில், அமாவாசைத்திதி வரும் போது அன்றைய தினம் அரசமரத்தைப் பிரதட்சணம் செய்வதால் உயர்பலன் கிடைக்கும் என்பதும் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி பிரதட்சணம் செய்தல் என்பதன் அர்த்தத்தை நோக்கின் அதன் அர்த்தம் உடலால் பிரணவ மந்திரத்தை எழுதுதல் என்று ஓர் ஐதீகம் உண்டு.தொடர்ந்து இவ்வகை பிரதட்சணம் மூன்று ஆண்டுகள் செய்தால் நாம் கோரும் வரங்களைப் பெறலாம் என்பதும் நம்பிக்கை.

அக்னி பகவான் ஒரு முறை மனக்குழப்பம் அடைந்து தேவர்சபையை விட்டு வெளியேறினாராம். அக்னி பகவானை சமாதானப்படுத்த தேவர்கள் அவரை விரட்டிக்கொண்டு பின்னால் சென்றனராம். அக்னி ஒரு குதிரை வடிவமெடுத்து ஒரு அரசமரத்தில் மறைந்து கொண்டாராம். குதிரைக்கு வடமொழியில் அசுவம் என்று பெயர். இந்தநிகழ்வின் காரணமாக அரசமரத்திற்கு அசுவத்தமரம் என்ற பெயரும் ஏற்பட்டதாக வரலாறு உண்டு.

பகவத்கீதையில் கண்ணன் மரங்களில், தான் அரச மரமாக உள்ளேன் எனக் கூறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்திரங்களை சாற்றுதல் என்று எடுத்துக்கொண்டால் சிவனாருக்கு வில்வமும்,திருமாலுக்கு துளசியும், விநாயகருக்கு அறுகும், அம்பிகைக்கு வன்னி, நெல்லியும் அமைந்துள்ளன.

மலர்கள், பத்திரங்கள் பலவாக இருக்கலாம். ஆனால் நாம் வழிபாடு செய்யும் போது மனம் ஒருமையுடன் இருந்தாக வேண்டாம்.

மலர் கிடைக்கவில்லை என்ற கவலை வேண்டாம். பச்சிலைகள, பத்திரங்கள் உள்ளன. இலைகள் இல்லை என்றாலும் கவலையில்லை.

"உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற வகையில் மெய்யன்போடு வழிபடும் எமது மனதையே, உள்ளத்தையே எம்பெருமான் விரும்புகின்றார் என்பதை அறிவோம். இந்த இடத்தில் சுவாமி விபுலானந்த அடிகள் அழகாகக் கூறியுள்ளதைப் பாருங்கள்.

"வெள்ளை நிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ,
வெள்ளை நிறப்பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல,
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சந்தர்ப்பங்களில் இறைக்குச் சாத்தி வழிபட எமக்கு மலர்கள் கிடைக்காமற் போகலாம். அதற்காக நாம் கவலை கொள்ளாது எமது உள்ளமாகிய தாமரையை இறைவனுக்கு சமர்ப்பித்து வணங்குவோம். அதுவே இறைவன் உவந்தேற்கும் மலராகும் என்பது விபுலானந்த அடிகளாரது கருத்தாகும்.

சோமவாரம், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை அரசமர வழிபாட்டுக்கு உகந்தவை, உன்னதமானவை. தினமும் அரசமரத்தை வலம் வந்து வணங்குதலும் சாலச் சிறந்ததாகும். இதில் அர்த்தம் உண்டு. அதாவது நாம் அரசமரத்தை பிரதட்சணம் செய்யும்போது இம்மரத்தின் மருத்துவபயன் எமது உடம்பில் பதிய, உறைய வாய்ப்புண்டு.

தேக்கு, அகில் போன்ற மரங்கள் விலையில் உயர்ந்தவையாகக் காணப்படினும் அரசு, வேம்பு, வில்வம், வன்னி, நெல்லி போன்ற மரங்களுக்கு தெய்வீகத்தன்மையும், புனிதத்தன்மையும் உண்டு. அரச மரத்தை வெட்டுவதோ, தறிப்பதோ பாவமான செயலாகும்.

எனவே மரங்களை வளர்ப்போம், வழிபடுவோம், வளமாக வாழ்வோம்.

*(நன்றி - சைவ நற் சிந்தனைகள்)*

## உடலின் பயன்கள்

கால்கள் பயன்படும், ஆலயம் செல்ல
கரங்கள் பயன்படும், அள்ளி வழங்க
சிரசு பயன்படும், குனிந்து வணங்க
செவிகள் பயன்படும், நல்லுரை கேட்டிட
கண்கள் பயன்படும், கருணையுடன் நோக்க
உடல் பயன்படும், நல்லவற்றிற்காக உழைக்க
வேறு பயன்கள் இருப்பினும் இவற்றிற்கே முதலிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nursery Rhymes - their origin and allusions

T. V. Wijeyaratnam

You walk down the primary classes – you hear chirpy voices of the tiny tots singing in chours along with the teachers.

"eenie meenie mini mo" - a rhyme for counting. The Scottish equivalent of this English rhyme is "eetern,teetern, penny pump"

The rhyme- "one two buckle my shoe" is also similar rhyme – nursery rhymes are not verse composed to be sung by kids or to amuse them.

Most of these nursery rhymes have their origin in subject matter indented for adults. Some are based on historical events.they may be sly satires on important personage or crude jokes and romantic verses – just a clang association words.

Take the rhymes, "Ride a cock horse to Banbury". It was supposed to be a reference to queen Elizabeth I. But some say it refers to lady Godiva.

One Jack Horner was supposed to be steward to Richard whitting the last of the abbots of Glastonbury. At that time the monasteries were being broken up. Hoping to appease King Henry VIII, the abbot sent his steward Horner to London with a Christmas pie in which were hidden the title deeds of 12 manors. On the way Horner is said to have pulled out the title deeds of the manor at Mells.

It was said a man named Thomas Horner went to live at Mells. This histrorical event was the origin of the rhyme "Little Jack Horner" - The plum he pulled out was the title deeds of Mells.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There was an unpopular clergy man who was small made. The rhyme" Jack Spart" was sung to ridicule him " Jack Sprat " was the name of the dwarf.

How often have we heard children singing gaily?

"Gerogie porgy pudding and pie kissed the girls and made them cry "
when te boys come out to play
gerogie porgy run away"

Hardly do they know that this was a rhyme on King George IV (?) – On

his friendship with the women of the court. Totally unaware of this royal scandal children clap their hand and sing the rhyme.

There is a picture of Humpty Dumpty on the wall of the classroom. But does the primary class teacher or the children who sing the rhyme Humpty Dumpty ever stop to think what historical event gave rise to this jolly nursery rhyme? King John, youngest son of the king Henry II was a tyrannical king. When he was fighting a battle with France, the nobles and clergy forced him to set his seal to the document – Magna Carts – in Latin – it means the Great Charter – a basic document that states the liberties guaranteed for the English People. It happened on June 15- 1215 at Runnymede. It was a great fall from power for the king. This is referred to in the rhyme.

"Humpty Dumpty had a great fall"

The rhyme "May Mary Quote Contrary" is composed to refer to Mary Queen of Scots.

Most of you would have heard of the "Black Death@ - the pandemic plague which killed one third of the population of Europe in two years – 1348-1450. The victim first finds a reddish swelling – Like a rose – on the groin. it bursts and forms a ring or sores – like poises.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When the final stage comes the victim sneezes and falls to death. You would have seen and heard nursery kids singing the rhyme.

"Ring a ring of roses
a pocket full of posies
Achoo, achoo we all fall down"

Joyfully the fall down enjoying the fun quite unaware of the tragic events, this gave to this nursery rhymes.

Tales in England refer to the building of the London Bridge. It kept breaking down and it seemed only blood of babes was used to stick the stones together. It seemed they caught babes and dashed then against the building and that was how the London Bridge was built. Our children play a game, singing

"Here the robbers passing by
passing by passing by
The London Bridge is falling
down falling down falling down"

What is played happily as a game singing this nursery rhyme actually took of origin in this horrific happening during the building the London Bridge.

Slavery was rampant in the 19th century. Slave always tried to escape. Slaves' owners sent their people to catch the miserable slaves. From this event rose the nursery rhymes,

"Catch a nigger by toe
if he hollers let him go"

The interesting rhyme - which ends like this

"The dish ran away with the spoon
and cow jumped over the moon"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sounds absolute nonsense. But there is an interesting story behind it. Queen Elizabeth I was a lovable queen full of fun and mischief. She nicknamed her courtiers. One man was called spoon. Yet another was named moon and fourth was named cow. Now if you go through the nursery rhymes, you can understand better!

the nursey rhyme,

"hey didle didle
the cat and the fiddle"

- is a rhyme which lampooning on Queen Elizabeth I or Queen Mary

There may be many more such stories which the readers may know and enlighten us on.

*(Courtesy: Ceylon Daily News)*

**வாழ்க்கையில் பின்பற்றவேண்டியவை**

தீயவற்றை அழித்து விடு
நல்லவற்றைக் காப்பாற்று
தர்மத்தை நிலைநாட்டு

*"........ பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்
பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்......"*

*- மகாகவி பாரதி -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Where Have All The Transistors Gone?

**By Thilaka V. Wijeratnam**

The ' 60s were the era of the transistor. We were then stationed in Mullaitivu. I remember how those boys who went to Saudi on various job assignment would bring battery- operated transistor radios, and turning the volume high would stand outside their gates and enjoy the loud music from the commercial Service.

My husband also bought one, not to advertise to all and sundry that we have a transistor, but to listen to the journey of Apollo 11 to the moon. He brought a neat little one, Kept it on the table and admired it from all angles as man would a woman and commented proudly, 'She's pretty' - and then fearing feminine jealousy quickly added 'like you'- that was the first time anyone had called me pretty.

But men are born liars - at least the married men are

That apart, the *little lady* as we called her behaved well for a month. Then Trouble started. She just wouldn't say a word, leave along sing. My husband tried to manipulate her but gave up in disgust. I tool over. I tried patting her. She, like a woman scorned began to make all sorts of jarring noises that mu husband shouted "Shut the d----thing" This led to more traumatic outpourings from her.

But I never gave up on her. It was sad to see her sitting there, without a word and sans the interest of the who

"You are pampering her" he said "I have to till the landing on the moon" I said stroking her gently and patted her and all of a sudden she broke out into a song. She had yearned for the human touch.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The programme which my husband and I looked forward to was the "news". then one day she suddenly wend mum. I coaxed her, pampered her and wend on tapping Her- and at last there was a murmur. We drew close. She spoke, but what came out was not the news but the weather report! she had got the better of us that day.

Whenever I go to bed I would take the little lady and keep her on a stool near my bed and listening to her music I would fall asleep. On one such occasion, I woke up with a start to hear a howling shrill noise. Could it be a burglar alarm i thought. No change for over there at Mullaitivu the best burglar alarm was the vigorous vibrations of all our discordant vocal cords in accordance! I tiptoed to our old ayah's room - she was a snoring Zzzzzzzzzzzz! it struck me that the culprit was our transistor- yes, there she was wailing like the sirens of odyssey - I had forgotten to switch her off soon after we got a transfer out of Mullaitive and had access to radio and TV The little lady who had spoken to us in our lonely days was soon ignored. She had no importance in our home.

What had happened to the transistors in the Country?

perhaps dumped in the junk bok- a toy for the kids!

## தவிர்க்க வேண்டியவை

பொய்

களவு

மது, மாது

மாமிசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகள் கைப்பொருள்

குழலினிது யாழ் இனிய என்ப
தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்
திருக்குறள் படித்த காலந்தொட்டே யாழ் என்னுடன் பண்டைய தமிழ்
இசைக்கருவி குறித்து ஒரு
ஆர்வம் உள்ளூர இருந்துகொண்டே இருந்தது.

தொல்காப்பியம் தோன்றுவதற்கு
நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே யாழ் உருவாயிற்று
ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஹரப்பா நாகரிகத்தில் யாழ்
காணப்படுகிறது.
21 நரம்புகள் கொண்ட பேரியாழ்.
17 நரம்புகள் கொண்ட மகரயாழ்
16 நரம்புகள் கொண்ட சகோட யாழ்
7 நரம்புகள் கொண்ட செங்கோட்டி யாழ்

## வீணை

பெண் என்பவள் வீணோ என நினைத்து
பேதமையில் புரண்ட மனிதா
கண் இரண்டு உண்டு
அவள் பார்வை வென்று
காதல் கடைக்கண் காட்டி
மகிழ நல் இடமும் உண்டு

வீணை நரம்பு தொட்டுத் தழுவிடப்
பிறக்கிறது நாதம்
பெண் மனம் நனைத்து நினைத்திட
பிறக்கும் காதல் கீதம்
நரம்பு இசைக்கருவிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய வடிவமுடையது வீணை
இசையின் நுட்பங்கள், தத்துவங்கள் என்று எல்லாமும்
தெளிவாய் வெளிப்படுத்தி இசைப்பது வீணை
தமிழர்கள் வாசித்த முதல் கருவி வீணை

பண்டைய காலம் தொட்டு
வீணை பண் கேட்டுக்கொண்டிருக்கிறது

குடம், மேற்பலகை, தண்டி, மாடச்சட்டம்,
சுரைக்காய், பிரடைகள், யாழிமுகம், மேளச்சட்டம்,
மெழுகுச்சட்டம், 24 மெட்டுக்கள்,
குதிரைகள், லங்கர், நாகபாசம் என்று
வீணையின் பாகங்கள் உண்டு
வீணையின் ஆதாரம் பலா மரமே

தண்டியின் ஒரு பக்கம் குடமும்,
மற்றொரு பக்கம் யாளி முகமும் என இணைந்த உருவமே வீணை
குடப்பக்கம் சற்றுப் பருத்தும்,
யாளி முனைப் பக்கம் சற்றுச் சிறுத்தும் இருக்கும்.
தண்டியின் இரு பக்கங்களிலும் மெழுகுச் சட்டங்கள் உண்டு.
அவைகளின் மேல் 2 ஸ்தாயிகளைத் தழுவிய 24 மெட்டுக்கள்
மெழுகினாற் செய்யப்பட்டிருக்கும்

யாளி முகத்திற்கு அருகிலிருக்கும் சுரைக்காய் ஒரு தாங்கியாகவும்,
ஒலிபெருக்கும் சாதனமாகவும் பயன்படுகின்றது
நான்கு வாசிப்புத் தந்திகள் லங்கர்களின் நுனியிலுள்ள வளையங்களில்
முடியப்பட்டு,
குதிரையின் மேலும், மெட்டுக்களின் மேலும் சென்று பிரடைகளில்
பிணைக்கப்பட்டிருக்கும்.
பெண்ணும் வீணையும் ஒன்றே என்பேன்
அவை இரண்டும் என் இரு கண்கள் என்பேனே!

பெண்ணின் பார்வை நரம்பு நாணங்கள்
மானிடர் மனங்கள் நிறைத்து நோய்கள் தீர்க்கும்
சரஸ்வதி கையில் தவழும்
வீணை நரம்புகள் தொடடசைத்தால்
காற்றில் கலந்து கீதமாய் மன அமைதி நீட்டும்

"வீணை ரசிகன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொரூபியின் சொரூபம்

வைகாசி மாதம் 4ம் திகதி எமது யாழ் இந்து மகளிர் கல்லூரியின் நறுமணம் பரப்பிய புகழ் பூத்த மலர் ஒன்று உதிர்ந்தது. அவர் வேறுயாரும் அல்ல. பல விருதுகளைப் பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்த செல்வி சற்சொரூபவதி நாதன் என்னும் போது அவரின் அந்த இனிமையான, கம்பீரமான, சிறந்த உச்சரிப்புள்ள, குரல் தான் எமது ஞாபகத்திற்கு வரும். அந்தக் குரல் ஓய்ந்து விட்டது செல்வி சற்சொரூபவதி நாதனை நாம் "சொரூபி, சொரூபி அக்கா" என்றே அழைப்போம். சொரூபி அக்கா உடுப்பிட்டி நவிண்டில் சங்கரத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ். ஆர். எஸ் நாதன், நீலாயதாட்சி என்பவர்களின் இரண்டாவது மகளாகச் சிங்கப்பூரில் பிறந்தார்.

இவர் ஆரம்பக்கல்வி முதல் சீனியர் வகுப்பு வரை, யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கற்றார். கல்வி, கற்ற காலங்களில் அவர் தனது கல்வியில் சிறந்து விளங்கிவர். அவரது நண்பிகளான திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம், திருமதி சத்யலட்சுமி சிவலிங்கம் கூறுவார்கள் "சொரூபி எல்லா வகுப்புக்களிலும் முதலாவதாகத் தான் வருவார் கல்வியில் மாத்திரம் அல்லாமல் நாடகம், பேச்சு போன்றவற்றிலும் சிறந்த விளங்கினார்."

"என் பள்ளிப் பருவத்தில் ஏரம்பமூர்த்தி ஆசிரியர் முதலில் என்னைச் "சிற்பியும் சிறுமியும்" என்ற நாடகத்தில் நடிக்க விட்டமை மேடையில் கூச்சமில்லாமல் பேசும் திறமைக்கு வித்திட்டது என அடிக்கடி கூறுவார். செல்வி, பாடசாலை ஆசிரியர்களையும் அதிபர்களையும் நினைவு கூர்ந்து கல்வித்தெய்வங்கள் எனக்கு கல்வியுடன் கலை ஆக்கங்களையும் கற்றுத்தந்தவர்கள் என்று நினைவு கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தான் ஒலிபரப்பரப்பாளராக இருந்தாலும் "நான் ஒரு விஞ்ஞான பட்டதாரி" எனவும் கூறுவார்.

இவர் எமது பழைய மாணவிகள் சங்கத்தின் (கொழும்பு கிளை) ஸ்தாபகத் தலைவியாக 1993ல் தெரிவு செய்யப்பட்டார். பழைய மாணவிகள் சங்கத்து ஒரு முக்கிய தூணாக இருந்தவர். இன்று அந்தத் தூண் சரிந்துவிட்டது. எமது பழைய மாணவிகள் சங்கத்திற்கு இஃது ஒரு பெரிய இழப்பாகும்.

எமது பழைய மாணவிகள் சங்கம் ஒரு நிகழ்சியைச் செய்யும் போது, இவரின் திட்டம் வகுத்தலை நான் பார்த்து ஆச்சரிப்பட்டுள்ளேன் இவரின் 40 ஆண்டு ஒலிபரப்புச் சேவையை முன்னிட்டு எமது பழைய மாணவிகள் சங்கம் "சகலகலா வித்தகி" என்ற பட்டத்தை அவருக்கு வழங்கிக் கௌரவித்ததமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு 2010ம் ஆண்டு தான் கிட்டியது. அவர் தலைவியாக இருக்கும் போது, நான் செயலாளராகப் பதவி வகித்தேன். இவருடன் இணைந்து பணியாற்றியதனால் நான் பலவற்றைக் கற்றுக் கொண்டேன்.

இவர் எப்போதும் எமது முன்னேற்திற்கு ஊக்கம் அளிப்பதோடு எமது முன்னேற்றங்களையும் கேட்டு அறிந்து மகிழ்வார்.

அவருக்கு மிகவும் பிடித்த வாக்கு "எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை" என்பதாகும். பெண் எப்போதும் தனக்கென ஒரு அடையாளத்தை வைத்து முன்னேற்றத்துக்காக அதை நோக்கி செயற்பட வேண்டும் என்று கூறுவார்.

2011ம் ஆண்டு திருமதி திலகா விஜயரட்ணம் எழுதிய நாடகத்தை அவர் நெறியாள்கை செய்து, பழைய மாணவிகள் நடித்தோம் அதனை எம்மால் மறக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர் பதவி வகித்த ஏனைய சங்கங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு மகளிர் இந்து மன்றம் | - | தலைவி |
| அகில இலங்கை இந்து மகளிர் இந்து மாமன்ற முகாமைப் பேரவை | - | உறுப்பினர் |
| தமிழ்ச் சங்கம் | - | உபதலைவி |
| தேசிய இலக்கிய கலாச்சாரக் குழு | - | உறுப்பினர் |
| தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தணிக்கை சபை | - | உறுப்பினர் |

## இவர் பெற்ற விருதுகள்

ஸ்ரீ ஜவகர்லால் நேரு விருதை அன்னாரின் கைகளாலே பெற்றவர் இவர்

சிறந்த ஜனரஞ்சக. பெண் செய்தி வாசிப்பாளர் - **ஜனாதிபதி பரிசு**

தொடர்பியல் வித்தகர் விருது - **கலாச்சார அமைச்சு**

சிறந்த பெண்மணி விருது - **ஐக்கிய நாடுகள் சங்கம்**

அர்ப்பணிப்புடானான அறிவிப்பாளர் - **இலங்கை வானொலி பவளவிழா**

தேசிய விருது - **தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்**

கலாபூஷணம் - **கலாச்சார அமைச்சு**

"உண்டா" - **சர்வதேச விருது**

அன்னார் மறைந்தாலும் அவரைப்பற்றிய பசுமையான நினைவுகள் என்றும் எம் மனத்தில் நிலைத்திருக்கும்

**திருமதி கௌரி ரமணா**
பழைய மாணவி
யாழ்/ இந்துக் மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லின் செல்வி எங்கள் தோழி

பால்ய பருவத்திலிருந்து ஒன்றாகச் கல்வி கற்ற எம் மனிதில், சமீபத்தில் ஈசனடி சேர்ந்த, எம் அருமைத்தோழி பற்றிய நிலைவலைகள் அடிக்கடி வந்து மோதுவதில் வியப்பேதுமில்லை. இது யாதார்த்தம்.

பன்முக ஆற்றில் கொண்டவர் எமது தோழி என்பதில் ஐயத்திற் கிடமேயில்லை. அவருடைய சந்சொரூபவதி என்ற நாமத்தை, சொற்சொரூபவதி என்றழைத்தாற் கூட, மிகப்பொருந்தும் என்பது பலரது அபிப்பிராயம்.

இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்காக கேட்பவர்கள் கேட்டவர்கள், இரசிப்பவர்கள், இரசித்தவர்கள், இவர்கள் யாவருக்குமே சந்சொரூபவதி மிக நெருக்கமானவர் என்றால் அது மிகையாகாது.

அவர் ஒரு சிறந்த செய்தி வாசிப்பாளர், பேச்சாளர், தயாரிப்பாளர், எழுத்தாளர், நாடக நடிகை, தொகுப்பாளர், அறிவிப்பாளர், கட்டுபாட்டாளர். ஒலிபரப்பாளர், இவ்வண்ணம் அவரது ஆற்றல் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம், அத்தனையும் உண்மை, யதார்த்தம்.

இத்தனை பன்முக ஆற்றல்களின் மத்தியில் நான். அவரிடம் கண்டுகளிப்புற்றது, பாராட்டியது, அவரது தன்னடக்கம், பணிவு, என்பனவற்றையே. எச்சந்தர்ப்பத்திலும், அவர் தன்னைப் பற்றிப் புகழ்ந்தது கிடையாது. ஏதோ என் கடமையை என்னால் இயன்ற அளவு செய்கின்றேன், என்பதே அவரது தொனி. அவரது தோற்றத்தில், நடை, உடை பாவனையில், எளிமை, அமைதியான நடை அமைதியான போக்கு, அநாவசியமாகப் பேசியது கிடையாது. இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தில் ஓரமாகப் போய்க் கொண்டிருப்பார். அவரது சிந்தனை எல்லாம், தான் ஆற்றப்போகும் நிகழ்ச்சி ஒன்றைப் பற்றியே இருக்கும்.

எனது இளம்பராய பள்ளிக்கூட அனுபவத்தோடு, கூட வானொலியிலும், எனக்கு அவரோடு, ஏறத்தாள 26 ஆண்டுகள் அனுபவம் உண்டு. வானொலியில், "கலைக்கோலம்" மகளிர் நிகழ்ச்சி, சமயநெறி, "உரை சித்திரம்" ஆகிய நிகழ்ச்சிகளில் யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் இணைந்து செயற்பட்டுள்ளேன். அந்த அனுபவங்கள் அத்தனையும் மறக்க முடியாதவை, மனதை விட்டகலாதவை, சுவாரஸ்யமானவை. இதற்கு ஒரு உதாரணம் சொல்வேன், வானொலி நிகழ்ச்சி, "கலைக்கோலம்" நிகழ்ச்சி, பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. செல்வி தான் தயாரிப்பாளர், யான் எடுத்துக் கொண்ட விடயம் "இலக்கியத்தில் இசை", அவர் என்னை அறிமுகப்படுத்திய பின் யான் உரையாற்ற ஆரம்பிப்பேன், இடையிடையே அவர் வினாக்கள் தொடுப்பார், அவற்றிற்கு யான் விடை அளிக்கும் போது புதிய புதிய கருத்துக்களும் தோன்றும், அவற்றை அவர் இரசிப்பார். ஒலிப்பதிவு முடிந்த பின் "நேயர்களுக்கு முன் உங்கள் உரையை, அதன் கண் பொதிந்துள்ள பல விடயங்களை, நான் தான் முதலில் இரசித்தேன். அந்த வாய்ப்பு எனக்குத் தான். இந்த விதத்தில் யான் அதிஷ்டசாலி", என்று முகம்மலர அகம்மலர கூறினார். இது தான் செல்வி சற்சொரூபவதி. மேலும் ஒரு முறை எமது நிகழ்ச்சி பதிவாகிக்கொண்டிருந்தது. செல்வி, எனது உரையின் இடையே வினாக்களைத் தொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அவர் வினா தொடுக்க வேண்டிய கட்டம். அவர் யாதும் பேசவில்லை. மௌனமாக இருந்தார், மணித்துளிகள் நகர்ந்து கொண்டிருந்தன, அவர் வினாவினால் தான், யான், உரையைத் தொடரலாம். அவர் மௌனம் தொடர்ந்தது. திடீரென "நீங்கள் இப்போது கூறிய கருத்தில் நான் என்னை மறந்தே விட்டேன். அடடா! தொடருவோம்" என்று கூறினார். நிகழ்ச்சிப்பதிவை இடைநிறுத்தி மீண்டும் தொடர்ந்தோம். அத்தகைய ஈடுபாடு அவருக்கு, அவரது தயாரிப்பில்.

அன்னாரது மறைவு பலருக்கும் நட்டமே! பெரும் இழப்பே. அவரது சேவை, சிந்தனைகள், கருத்துக்கள், தயாரிப்புகள், யாவும் இன்றைய சமுதாயத்திற்கு மிக மிக வேண்டியவை. ஆனால்! ஆம் ஆனால், அவரது மறைவை எம்மால் தடுக்கமுடியாது. அவரது நல்லாத்மா எம்பெருமான் பாதக்கமலங்களைச் சென்றடைய ஈசனை வேண்டிநிற்போம்.

"சிறு நண்டு மணல்மீது படம் ஒன்று கீறும்
சில வேளை கடல் வந்து அதைக் கொண்டு போகும்"

**கலாபூஷணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்த குரு**
(யாழ்/ இந்துக் மகளிர் பழைய மாணவிகள் சார்பில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு
# இருபத்தியிரண்டாவது ஆண்டு அறிக்கை 2015

சங்கத்தின் இருபத்தியிரண்டாவது ஆண்டு பொதுக்கூட்டம் 2016ம் ஆண்டு தைமாதம் 31 திகதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களின் தலைமையில் பம்பலபிட்டியில் அமைந்துள்ள துவாரகா உணவகத்தில் மதியபோசனத்துடன் நடைபெற்றது.

இருபத்தியிரண்டாவது ஆண்டு செயற்குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| போஷகர் | : | திருமதி சரஸ்வதி ஜெயராஜ் |
| | | திருமதி உமாராணி குமாரசாமி |
| தலைவி | : | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| உப தலைவி | : | திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| | | திருமதி பொன்மலர் கந்தசாமி |
| செயலாளர் | : | திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் |
| உப செயலாளர் | : | திருமதி விமலா மாணிக்கவாசகன் |
| பொருளாளர் | : | திருமதி சிவமலர் சுப்பிரமணியம் |
| உப பொருளாளர் | : | திருமதி கௌரி ரமணா |
| நிர்வாகக்குழு | : | திருமதி பிரேம்குமாரி கயிலைநாதன் |
| | | திருமதி சின்னையா கலையரசி |
| | | திருமதி ருக்மணி அரசரட்ணம் |
| | | செல்வி சற்சொரூப்வதி நாதன் |
| | | திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம் |
| | | திருமதி அருளாம்பிகை கனகேந்திரன் |
| | | திருமதி திலகா விஜயரட்ணம் |
| | | திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி |
| | | திருமதி கமலேஸ்வரி திருநாவுக்கரசு |
| | | திருமதி மங்களேஸ்வரி சிவராஜா |
| | | திருமதி சகிலா சுரேஷ் |
| யாழ்நாதம் ஆசிரியை | : | திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு |
| உதவி ஆசிரியை | : | திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விருது : எங்கள் கல்லூரியின் 2015 ம் ஆண்டுக்கான சிறந்த மாணவிக்கான பொன்விருது எமது சங்கத்தினால் செல்வி சரவணபவானந்தமூர்த்தி துவாரகாவிற்கு வழங்கபட்டது.

இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கான உதவி :-

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 500,000/= த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான வசதி குறைந்த 8 மாணவர்களுக்கு மாதந்தோறும் தலா ரூபா 500 வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வருடத்தின் நிகழ்வுகள்

இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை மாணவிகளுக்கு உதவி :-

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 100,000/= இல் வரும் வட்டிபணத்தில் திறமையான வசதி குறைந்த 3 மாணவர்களுக்கு வருடந்தோறும் தலா ரூபா 3,500/= வழங்கப்பட்டு வருகின்றது.

வர்த்தகப்பிரிவில் மாவட்ட ரீதியில் முதல் இடம் பெற்ற மாணவியான செல்வி கௌசனா பாலசுந்தரத்திற்கு திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் மடிக்கணனியை அன்பாக வழங்கினார்.

மற்றும் அவுஸ்ரேலியா, கனடா, லண்டன், கொழும்புக்கிளை, ஆகியன இணைந்து மூன்று மாடிக்கட்டிடம் ஒன்றை பாடசாலைக்கு நிர்மாணித்துக் கொண்டு இருக்கின்றோம்.

சங்க அங்கத்துவம்.

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ.கீ.பி.மா.சம்) ஓர் அங்கத்துவ சங்கமாக தொட ர்ந்தும் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சங்க கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத்தந்துதவும் இந்து வித்தியா விருத்தி சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்க கணக்குகளை இலவசமாக கணக்காய்வு செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்து தந்த திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத்தலைவிக்கும், உபதலைவிக்கும், பொருளாளருக்கும் நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறக் கடமைபட்டுள்ளேன்.

யாழ்நாத ஆசிரியர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குருவிற்கும் எனது நன்றிகள்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் முன்னேற கல்லூரி வளாகத்திலுள்ள நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையார் அருள்புரிவாராக.

**திருமதி மிதிலா ஶ்ரீ பத்மநாதன்**
(பொதுச்செயலாளர)

**திருமதி அபிராமிகயிலாசபிள்ளை**
(தலைவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் உயர்ச்சி பெற

| | | |
|---|---|---|
| வணங்க வேண்டிய தெய்வம் | - | தாய், தந்தை |
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - | பணிவு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| மிகவும் கீழ்த்தரமான விஷயம் | - | பொறாமை |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவ விடக்கூடாதது | - | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | - | நட்பு |
| மறக்க கூடாதது | - | நன்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதன் மனித நேயன்
# அமரர் திரு. கயிலாசபிள்ளை அவர்கட்கு
# ஓர் அஞ்சலி



மனித நேயம் என்றால் என்ன
என வாழ்ந்து காட்ட இறையால்
பூமிக்கு அனுப்பப்பட்ட
மனிதநேயன் ஐயா நீ !
கலியுகத்தில் நல்லனவற்றிற்கு
இடமில்லை - எனவே மக்களுக்கு
எவ்வண்ணம் வாழ வேண்டும்
என நெறிப்படுத்த பூமிக்கு
வந்த நல்லவன், வல்லவன், நீ !

அன்னை அபிராமிக்கு அருந்துணையாய்,
அருமருந்தாய், ஆர்வலனாய்,
இனியவனாய், ஈகையாளனாய்,
உயர்ந்தவனாய், ஊன்றுகோலாய்,
எளியவனாய், ஏற்றமுள்ளவனாய்,
ஐக்கியமாய் வாழ்ந்து
வாழ்வளிக்க பூமலரில்
மலர்ந்தவன் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அழகு, அறிவு, பண்பு
விவேகம், சாதுரியம்,
புரிந்துணர்வு, அமைதி,
பொறுமை, செயற்றிறன்
யாவும் பின்பற்றப்பட வேண்டிய
நற்பண்புகளாம்.

வந்தாய் பூமிக்கு
வாழ்ந்தாய் பூப்போன்று
மறைந்தாய் கைலைக்கு
காரணம் நீ கைலையின் பிள்ளை
கயிலாசபிள்ளை- அது உன் வீடு - இல்லம்

மனித இனத்துக்கு எடுத்துக் காட்டாய்
வாழ்ந்து காட்டிய நீ !
வாழ்த்தப்பட வேண்டியவன் !
இவ்வையகம் உள்ளவரை
உன் பெயர் வாழும்!

உன் நற்கதிக்கு இதோ!
எம் அஞ்சலி!
எல்லோரும் தோத்தரிப்போம்
உன் சார்பில்!


"நற்றுணையாவது நமச்சிவாயவே"

**திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சார்பாக
(கொழும்புக்கிளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி செலுத்துகின்றோம்
# செல்வி சற்சொரூபவதி நாதன்
# "செய்தி வாசிப்பின் சிகரம்"



இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பின் சிரேஷ்ட செய்தி வாசிப்பாளரும், அறிவிப்பாளரும், தயாரிப்பாளரும், கட்டுப்பாட்டாளரும், தமிழ்ச்சேவை, ஆங்கிலச்சேவை, கல்விச்சேவை, செய்திப்பிரிவு ஆகியவற்றில் கடமையாற்றிய மூத்த ஒலிபரப்பாளருமான, செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்கள், எங்கள் பாடசாலைப் பழைய மாணவி என்பதில் பெருமை அடைகின்றோம். அவர் சமீபத்தில் எமைப்பிரிந்துவிட்டார், என்பதையிட்டு வேதனை அடைகிறோம், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்லவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்

**பழைய மாணவிகள்**
**யாழ்/ இந்து மகளிர் கல்லூரி**
**(கொழும்புக்கிளை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Udayaa Jewellers

303, Galle Road, Wellawatte, Colombo 06. Sri Lanka

Tel: +94 112554933

*With Best Compliments From*

Arrujuna

# Arrujuna Jewellery

අරුජුණා ජවෙලරි    அருஜுணா ஜுவலரி

30, Galle Road, Dehiwela, Sri Lanka.

Tel : 2761220



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# ARRUJINA JEWELLERY

*Collection of Fine Genuine Jewellery*

අරුජිණා ජුවෙලරි அருஜினா ஜுவலரி

36, Galle Road, Dehiwela, Sri Lanka.
Tel : 2716028, 4563499, Fax : 2733503
Email : arrujina@sol.lk

*Well Wishers*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்ல வேண்டும்

மூன்று எழுத்துக்கள் தான் கொண்ட போதும், "நன்றி" என்னும் இச் சொல் அற்புதமானது. ஆனந்தம் அளிப்பது. மானிடப் பண்பை வெளிக்கொணர்வது எனவே நன்றி சொல்வோம். யார், யாருக்கு!?

முதற் கண் இந்த அற்புதமான உலகிலே, கல்வியின் பெருமையை உணரவைத்து, வழிப்படுத்தவல்ல ஒரு குடும்பத்தில் எனைப் பிறக்க வைத்த முழு முதலாம் ஈசனுக்கு எனது நன்றிகள்.

தொடர்ந்து, உயிர்தந்து, உண்டிதந்து, உறையுள் தந்து கல்விச் செல்வம் பெறவைத்து வழிகாட்டிய, என் இருகண்கள் போன்றமைந்த எனது அன்பு நிறை பெற்றோருக்கு என் மனம் நிறைந்த நன்றிகள்.

யாழ் - நாதம் - இச்சஞ்சிகை உருவாகி வெளியிடும் வரை, ஆக்கமும் ஊக்கமும் அன்புடன் தந்த, எமது மன்றத்தலைவி, செயலாளர், இருவருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள்.

மேலும் இச்சஞ்சிகைக்கு மனமுவந்து ஆக்கங்கள் தந்துதவிய கல்விமான்களுக்கும், விளாம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருந்தகைகளுக்கும், ஆக்கங்களின் அச்சுப்பிரதிகளைச் சரிபார்க்க உதவிய சகோதரிகளுக்கும், இவ்விதழை அழகாக அச்சிட்டுத் தந்துதவிய Unie Arts நிறுவனத்தினருக்கும், எனது மனம் நிறைந்த உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

*"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

*யாழ் நாதம் ஆசிரியை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலையின் பாசமிகு பழைய மாணவிகளின் ஒரு பகுதினர்.



யாழ்நாதம் வெளியீட்டு விழாவின் பிரதம விருந்தினர்
திருமதி எம். விமலநாதன் அவர்கள் முதற்பிரதி பெற்றுக்கொள்ளும் நிகழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் நாதம் வெளியீட்டு விழாவில் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு (பழைய மாணவி) அவர்களின் வீணை இசை நிகழ்ச்சி.



திருமதி சத்யலட்சுமி சிவலிங்கம் (பழைய மாணவி) மெல்லிசை நிகழ்வு வழங்குகிறார்.

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD. COLOMBO 13. TEL: 011 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org